# பஞ்ச அமிர்தம்



யாழ் இந்துக் கல்லூரி மாணவர் வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

With best compliments from



**Ajanthas- Textiles**
54, Grand Bazaar,
Jaffna.

**Ajanthaa Trade Ltd**
66, Kasturiar Road
Jaffna.

**Ajanthas- Tex**
25, 4th Corss Street,
Jaffna.

With best compliments from

**RAVE MOTORS**

Dealers in motor spares, Motor cycle spears

HONDA YAMAHA SUZUKI [illegible]ASAKI
Tel: 22829
245, Stanley Road,
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# பஞ்ச அமிர்தம்

- 2 MAY 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

இந்துக்கல்லூரி மாணவர் வெளியீடு
*யாழ் இந்துக்கல்லூரி*
*யாழ்ப்பாணம்*
***1997***

941(P)CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி கீதம்

*வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி*
*வையகம் புகழ்ந்திட என்றும்* *(வாழி)*

*இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்*
*இந்து மதத்தவர் உள்ளம்*
*இலங்கிடும் ஒரு பெருங் கலையகம் இதுவே*
*இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்*

*கலைபயில் கழகமும் இதுவே - பல*
*கலைமலி கழகமும் இதுவே - தமிழர்*
*தலைநிமிர் கழகமும் இதுவே!*

*எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்*
*எம் மன்னை நின்னலம் மறவோம்*
*என்றுமே என்றுமே என்றும்*
*இன்புற வாழிய நன்றே*
*இறைவன தருள் கொடு நன்றே!*

*ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்*
*அவைபயில் கழகமும் இதுவே!*
*ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்*
*ஒரு பெருங் கழகமும் இதுவே!*
*ஒளிர்மிகு கழகமும் இதுவே!*
*உயர்வுறு கழகமும் இதுவே!*
*உயிரன கழகமும் இதுவே!*

*தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்*
*தனிப் பெருங் கலையகம் வாழ்க!*
*வாழ்க! வாழ்க! வாழ்க!*
*தன்னிகர் இன்றியே நீடு*
*தரணியில் வாழிய நீடு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இசை நூலகம்.



# திரு அ.பஞ்சலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் பக்கம்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

நுழை வாயில் - செல்வன். லோ. துஷிகரன் (இதழாசிரியர்) v

ஆசியுரை: - நல்லை ஆதீன முதல்வர் vi

**வாழ்த்துரைகள்:**

* திரு. அ.சிறீகுமாரன் (அதிபர், யாழ் இந்துக்கல்லூரி) vii
* பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (உபவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்) viii
* திரு.க.சண்முகநாதன் (அரச அதிபர், யாழ்ப்பாணம் ) ix
* திரு. ச. சத்தியசீலன் (வரலாற்றுத் துறை, யாழ். பல்கலைக்கழகம்) x
* கலாநிதி ஆ. குகபாலன் (பெற்றோர் சார்பாக) xi
* திரு. இ. பாலச்சந்திரன் (ஆசிரியர் கழகம் சார்பாக ) xii
* ச.திருக்குமரன் (சிரேஷ்ட மாணவமுதல்வர், யாழ் இந்துக்கல்லூரி) xv

**கவிதை:**

* திரு. சோ. பத்மநாதன் (கவிஞர் சோ.ப,அதிபர், ஆசிரியர் கலாசாலை, பலாலி) xvi
* செல்வன். ச.முகுந்தன் xvii
* செல்வன். கி.குருபரன் xix

நயப்புரை: திரு.க. சிவராமலிங்கம்பிள்ளை (இளைப்பாறிய பிரதி அதிபர், யாழ். இந்துக்கல்லூரி) xx

**அதிபர். அ. பஞ்சலிங்கம் அவர்களின் கட்டுரைகள்**

* தலைமைத்துவம் 01
* ஒரே தண்டனையா? 03
* பிரச்சனை யாருக்கு? 04
* பெற்றோரே தெரிந்து கொள்ளுங்கள் 05
* பரீட்சைகள் படுத்தும்பாடு 06
* வதைக்கும் வார்த்தைகள் 07
* விளையாட்டு மைதானம் 08
* தனியார் கல்லூரி நிறுவனங்கள் சூழ்நிலைக்கேற்ப பாடசாலைகளுடன் இணைந்து செயற்படலாம். 10
* வகுப்பறையில் அவர்கள் கற்பிக்காதவை 13
* பாடசாலை அதிபர்கள் ஒரு சிந்தனை 16
* பாடசாலை நிர்வாகத்தில் பணிவும் துணிவும் 18
* ஒதுங்குபவர்களை ஒதுக்காதீர்கள் 23
* பாடசாலைக்கல்வி முறைமை-ஒரு விமர்சனம் 25
* தண்டனையும் பரிகாரமும் 27
* ஒழுங்கற்ற அகச்சூழலிலே 30

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுழைவாயில்....



''எண்ணித்துணிக கருமம்'' என்ற சொல்லுக்கு இலக்கணமாக, ''பஞ்ச - அமிர்தம்'' என்ற இந்த நூல் வெளிவருகின்றது.

இந்தத் துணிவிற்கு காரணம் யார்? என்ற வினாவிற்கு விடையாக விளங்குபவர் இன்னூலின் நாயகன்; எமது வழிகாட்டி. அவர் மூலம் எமக்குக் கிடைத்தது துணிவுமட்டுமல்ல சிறந்த தலைமைத்துவ பண்பும் அதனுடன் சேர்ந்தே வளர்ந்தது. நாம் இந்தப் பெரும்பயன் பெற்றது அவர் அதிபராக இருந்ததால் மட்டுமல்ல. அவர் தம் எண்ணங்களை; சிந்தனைகளை எழுத்துரு வண்ணங்களால் சிந்தனைச் சிதறல்களாகத் தந்ததும் தான்.

அவையும் தான் எமக்கு இந்த பண்புகளைக் கூடவே வளர்த்தன. அதனால் அவற்றை உங்களுக்கும் குழைத்தள்ளித்தர நினைத்தோம். அதன் பயனாக உருக்குப் போன்ற கரங்களும், உயர்ந்த உள்ளங்களும் ஒன்றுபட உழைத்தன. அதனால் இந்தநூல் பிறந்து உங்கள் கரங்களில் தவழ்கின்றது. யாழ் இந்துக்கல்லூரியைத் தாங்கிய தூண்கள் என்ற அதிபர்களின் வரிசையிலே 18 வது தூணாக விளங்கியவர் திரு.அ.பஞ்சலிங்கம். அவர் கல்லூரியைத் தாங்கிய போது கல்வி மட்டும் தனித்து வளரவில்லை. அதனுடன் பிற பல செயற்பாடுகளும் சேர்ந்தே வளர்ந்தன. கழகங்கள் பலவற்றை தன்னகத்தே கொண்ட தலை நிமிர் கழகமாக மேலும் உயரத் தொடங்கியதோடு, கல்லூரியின் வரலாற்றில் வந்த வசந்த காலங்களில் ஒன்றாகவும் அவரது காலம் விளங்கியது.

உயர்திரு அ.பஞ்சலிங்கம் அவர்களுடைய கருத்துக்கள் பலவற்றை அறிவுக்களஞ்சியம், விளக்கு, உதயன், தூண்டி, மாற்றம் போன்றவற்றிலிருந்து தொகுத்தோம். அதுமட்டுமல்லாது இன்னூலுக்கு பல பெரியோர்கள் ஆசிரியுரை, வாழ்த்துரைகள், கவிதைகள், கட்டுரைகள் போன்றன தந்தும் அழகூட்டினர். அட்டைப்படம் திரு.பொ.ஞான தேசிகன் அவர்களது கைவண்ணத்தால் ஆனது. அவர்களுக்கும் எனது நன்றிகள், அதுமட்டுமல்லாது இம்மலர் மலர்வதற்கு எம்மோடு துணை நின்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், குறிப்பாக கலாநிதி.கா. குகபாலன், திரு.பெ.கி.றஞ்சன், ச.திருக்குமரன், ச.கணேஸ்குமார், ம.தயாகரன் திரு எஸ் .சிவஞானம் போன்றோர்க்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

லோ. துஷிகரன்
*இதழாசிரியர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை முதல்வரின் ஆசிச் செய்தி



அன்புடையீர்,

பழமையும் பெருமையும் வாய்ந்த யாழ் இந்துக்கல்லூரியின் அதிபராக இருந்து இளைப்பாறுகின்ற அதிபர் திரு.அ.பஞ்ச லிங்கம் தனிமனிதனாக வாழாது பல பொதுப் பணிகளிலும் சமூகப்பணிகளிலும் தன்னை அர்ப்பணித்தவர். அவர் ஏனைய அதிபர்களுக்கு ஓர் கலங்கரை விளக்காகச் செயற்பட்டுள்ளார்.

அண்மைக் காலமாக யாழ் இந்துக்கல்லூரி கல்வித் துறையிலும் ஏனைய துறைகளிலும் சாதனைகள் படைத்து முன்னிலையில் திகழ்வதற்கு திரு.பஞ்சலிங்கம் அவர்களுடைய அயராத உழைப்பே காரணம் என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

ஒய்வு பெற்ற திரு.அ.பஞ்சலிங்கம்

நலமே வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்

நல்லை
திருஞானசம்பந்தர் ஆதீனம்.

ஸ்ரீலஸ்ரீ. குருமஹா சந்நிதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர் வாழ்த்துகின்றார்



நீண்ட பார்வை, நிமிர்ந்த தோற்றம், துடுக்கு மீசை, குமின் சிரிப்பு, வெண்மை உடை கொண்ட புறத்தோற்றப் பாடுகளுடன் தனது சிந்தனையால், செயலால், வாழ்க்கை முறைமையால் மாணவர்களைக் கவர்ந்த உள்ளம் தான் அதிபர் திரு அ.பஞ்சலிங்கம் அவர்கள். அத்தகைய உள்ளத்தில் முகிழ்த்த சிந்தனைகள்; காலத்திற்குக்காலம் புதினப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த சில கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் உங்கள் கைகளில் மலருகின்றது.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டோடு தொடர்பு பட்ட விடயங்கள் பல இங்கு பிரசுரமாகியுள்ளன. பிரச்சினைகளும் அவற்றை விடுவிக்கும் வழி முறைகளும் தரப்பட்டுள்ளன.

கல்வித்துறை சார்ந்த அனைவருக்கும் இந்நூல் பயனுடைத்து என்பது எனது எண்ணம்.

இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு உதித்த நல்லெண்ணம் நூலாக மலர்ந்துள்ளது.

நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் அனைவருக்கும் தெரிவிப்பதில் அகமிக மகிழ்கிறேன்.

**அ. சிறிக்குமாரன்**
*அதிபர்*
*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துக்கள்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமை புரிந்து 1996 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களுக்கு மாணவ முதல்வர் சபை பிரியாவிடை வைபவம் நடாத்துவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இடப்பெயர்வு காரணமாக இப்பிரியாவிடை வைபவத்தை உரிய காலத்தில் நடத்த முடியாமற் போனது கவனத்திற்குரியது.

திரு பஞ்சலிங்கம் அவர்கள் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராக இருந்தவர். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னர் பல பாடசாலைகளில் ஆசிரியப்பணி புரிந்துள்ளார். கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமை புரிந்து, பின்னர் தனது சேவையின் பிற்பகுதியை இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமை புரிந்து ஓய்வு பெற்றார்.

திரு பஞ்சலிங்கம் சிறந்த ஆசிரியராகவும், கல்வி நிர்வாகியாகத் திகழ்ந்ததுடன் மாணவர்களை பக்குவப் படுத்துவதிலும் மிகவும் திறமை பெற்றவராகத் திகழ்ந்தார். இவரது வழிகாட்டல் மூலம் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர். மேலும் மாணவர்கள், ஆசிரியர்களின் அன்புக்கும் மதிப்பிற்கும் உரியவராக இருந்தார்.

கல்லூரி சிறப்பாக நடப்பதற்கு அக்கல்லூரியின் பழைய மாணவர்கள், பழைய மாணவர் சங்கம் பெரும் பங்காற்ற முடியும் என்ற பெரும் நம்பிக்கை கொண்டவர். இவரது காலத்தில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் பெரும் சாதனைகளைப் புரிந்தது. இச்சாதனைகளுக்கு அதிபர் பஞ்சலிங்கம் கொடுத்த ஒத்தாசை பெரும் உதவியாக அமைந்தது. இவரது காலத்தில் தான் கல்லூரி மைதானம் பழைய மாணவர்களின் முயற்சியால் விரிவாக்கம் பெற்றது.

அன்னார் ஓய்வு பெற்றாலும் எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்குத் தொடர்ந்து சேவையாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இறைவன் நல்ல தேக சுகத்தையும், மன அமைதியையும் கொடுப்பாராக.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
*உபவேந்தர்*
*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.*
*தலைவர். பழையமாணவர் சங்கம்*
*யாழ் இந்துக்கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபரின் வாழ்த்துக்கள்

யாழ் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களுள் ஒருவராகத் திகழ்ந்த, இளைப்பாறிய அதிபர் திரு.அ. பஞ்சலிங்கம் அவர்களது பிரியாவிடையின் போது வெளியிடப்போகும், பிரிவுபசார மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆரம்பகாலம் முதல் இன்று வரை சகல துறைகளிலும் திறமையும் ஆளுமையும் தம்மகத்தே கொண்டுள்ளவர்களே யாழ் இந்துக்கல்லூரியில் அதிபர்களாய் கடமையாற்றி, கல்லூரிக்கும் தமக்கும் பெருமையையும், நற்புகழையும் ஈட்டித்தந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வரிசையில் திரு.அ. பஞ்சலிங்கம் அவர்களும் இடம் பெறுகின்றார் என்பது மிகவும் பெருமைக்குரியதே. யாழ் இந்துவின் சகோதரத்துவக் கல்லூரியாகிய கொக்குவில் இந்துக் கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வியை பெற்றுக் கொண்டு, பின் யாழ் இந்துக்கல்லூரியில் தனது உயர் கல்வியைக் கற்று, பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞானப்பட்டதாரியாக வெளிவந்த திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆசிரியப்பணி புரிந்து, உப அதிபராகக் கடமையாற்றி பின்னர் அக்கல்லூரியின் அதிபராக சிறப்புறக் கடமையாற்றினார். அக்காலகட்டத்தில் கல்வி, விளையாட்டு என பல்வேறு துறைகளில் கொக்குவில் இந்துக்கல்லூரி சிறப்புற்று திறமையான கல்லூரி என பெயரை ஈட்டிக் கொண்டது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய தொரு அம்சமாகும்.

நிர்வாகத்துறையில், புலமைப்பரிசில் பெற்று, இந்தியத் தலைநகர் டெல்லியில் சிறப்புப் பயிற்சி பெற்ற பெருமையும் இவருக்குண்டு.

இடர்கள் சூழ்ந்த காலகட்டத்தில் யாழ் இந்துக் கல்லூரிக்கு அதிபராக இடமாற்றம் பெற்று வந்து அவர், கடமையாற்றிய காலகட்டம் மிகச் சிறந்ததொன்றாக அமைந்தது. மின்சாரம் இன்றி மாணவர்கள் கல்வி கற்க கஷ்டமான சூழ்நிலையில் கூட, பல்கலைக்கழக அனுமதியில், கலை, பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய துறைகளில் மிகப் பெருமளவில் மாணவர்கள் இடம் பெற்றது இவரது திறமைக்கு பெரும் எடுத்துக் காட்டாகும்.

பொறுமை, அடக்கம், நிர்வாகத்திறன் கொண்ட திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களது அதிபர் சேவை நாம் என்றுமே மறக்க முடியாத ஒன்றாகும். ஓய்வு பெற்றாலும் அவரது சிறந்த கல்விச் சேவை எமது கல்வி உலகத்திற்கு தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்பதே எமது அவா.

அவர் நீடூழி வாழ எமது நல்வாழ்த்துக்கள்.

**க. சண்முகநாதன்,**
*அரசாங்க அதிபர்,*
*யாழ் மாவட்டம்.*
*உபதலைவர், பழைய மாணவர் சங்கம்*
*யாழ் இந்துக்கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரின் வாழ்த்து

பொது நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்



இலங்கையின் புகழ்பூத்த தேசிய கல்லூரிகளுள் ஒன்றான யாழ்.இந்துவின் அதிபர் பதவியைத் திறம்பட வகித்துப் புகழ் பூத்த அதிபர் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டவர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள்.

யாழ். இந்துவின் மாணவர்கள், மாணவ முதல்வர்களால் அவரது சேவையைப் பாராட்டிப் 'பஞ்ச அமிர்தம்' என்ற நூல் வெளிவருவது அவரது சேவையின் சிறப்பிற்குத் தகுந்த சான்றாகும்.

அவர் அதிபர் பதவி வகித்த காலத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் அவருடன் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவரின் ஆளுமையையும், நிர்வாகத்திறமையையும், துணிவையும், எவருடனும் அன்பாகப் பழகும் சுபாவத்தையும், பொறுமையையும் அறிய முடிந்ததுடன் யாழ். இந்துவின் புகழ்பூத்த அதிபர்களுள் ஒருவர் அவர் என்பதையும் என்னால் அறிய முடிந்தது.

யாழ். இந்துவில் திரு.அ. பஞ்சலிங்கத்தின் அதிபர் காலம் கல்விச் செயற்பாடுகளில் மட்டுமல்ல புறச் செயற்பாடுகளிலும் புகழ் பரப்பிய காலமாகும். எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியிலும் அக்காலத்தில் கல்லூரி ஈட்டிய சாதனைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. பரீட்சைப் பெறுபேறுகளில் முதன்மை நிலை, விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பிடம், மைதான விரிவாக்கம், பெற்றோர் - மாணவர் - ஆசிரியர் கலந்துரையாடல்கள், பழைய மாணவர் சங்கத்துடன் நெருங்கிய உறவு, நூற்றாண்டு விழாமலர் வெளியீடு, பல்வேறு மாணவர் சங்கங்களின் தீவிர செயற்பாடுகள், சஞ்சிகை வெளியீடுகள், நூல்நிலைய விஸ்தரிப்பு அனைத்தும் மாணவரைப் பல்துறை பயிற்சியாளராக மாற வழி வகுத்தது.

இளைப்பாறியபோதும் அவரது சேவையை, ஆலோசனைகளை கல்வியுலகம் எதிர்பார்த்து நிற்கின்றது. அவர் நீண்ட ஆயுளுடனும், பூரண சுகத்துடனும் நிம்மதியாக வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**ச. சத்தியசீலன்,**
*தலைவர், வரலாற்றுத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*செயலாளர்,*
*யாழ். இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம்,*
*யாழ். இந்துக்கல்லூரி,*
*3-10-1997 .*

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பல்கலைக்கழக புவியியற்றுறைத்தலைவரின் வாழ்த்துக்கள்



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்களில் ஒருவராக திரு. அ.பஞ்சலிங்கம் அவர்கள் விளங்குகின்றார். அதிபர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு தைமாதம் இளைப்பாறிய போது கல்லூரியின் பழைய மாணவர்சங்கம் சாவகச்சேரியில் பிரிவுபசார வைபவத்தினை நடாத்திக் கௌரவித்தனர். அக்காலத்தில் நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக மாணவர் களினால் பிரிவுபசார விழாவினை சிறப்பாக நடாத்த முடியவில்லை. அதனை உணர்ந்த யாழ் இந்துவின் மாணவர்கள், மாணவமுதல்வர்களின் உதவியுடன் காலம் தாழ்த்தியாவது பிரிவுபசார விழாவினை நடாத்துவதுடன் அவரால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து மலர் ஒன்றினையும் வெளியிடுகின்றனர். அதற்காக மாணவர் சமூகத்தினை வாழ்த்துகின்றேன். மேலும் இளைப்பாறிய அதிபரை பெற்றோர், பழைய மாணவர் சார்பாக வாழ்த்தும் பாக்கியம் கிடைத்தமைக்கு எனது நன்றிகள்.

திருவாளர் அ.பஞ்சலிங்கம் அவர்கள் நாடு அறிந்த அதிபர். சிறந்த கல்விநிர்வாகி. ஆழ்ந்த புலமை கொண்டவர். அமைதியான, ஆனால் திடமான கொள்கை வகுப்பாளர். பெற்றோர் பழைய மாணவர்களின் அன்பைப் பெற்றவர். ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டுமல்லாது பெற்றோரும் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்ற வேண்டும் என்ற பெரு நோக்கம் காரணமாக காலத்துக்குக்காலம் பெற்றோரை அழைத்து கலந்துரையாடுபவர்.

அதிபர் அ.பஞ்சலிங்கம் அவர்களின் காலத்திலேயே யாழ் இந்துக்கல்லூரியின் க.பொ.த சாதாரண, உயர்தர மாணவர்களின் பெறுபேறுகள் உச்சக்கட்டத்தில் இருந்துள்ளதை எவரும் மறக்க மாட்டார்கள்.

அதிபர் அவர்கள் வயதின் காரணமாக இளைப்பாறிய போதிலும் அவரது பலதகைமையுள்ள திறமைகள் கல்லூரிக்குத் தொடர்ந்தும் கிட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். அவர் பல்லாண்டுகள் வாழ்ந்து கல்லூரிக்கும் எமது சமூகத்திற்கும் தொண்டாற்ற வேண்டும் எனக் கல்லூரியின் ஞான வைரவரை இறைஞ்சுகின்றேன்.

**கலாநிதி. கா. குகபாலன்**
*தலைவர்,*
*புவியியற்துறை,*
*யாழ்பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் கண்ட ஆசிரியர்



''கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதன்று,
ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதேயாகும்''

ரஸ்கின்

இவ் அறிஞரின் கூற்றுக்கிணங்க எம்மைக் கல்வி கற்பிக்கும் காலத்தில் கல்வியோடு ஒழுக்கத்தையும் ஊட்டித் தந்த திருவாளர் அ.பஞ்சலிங்கத்தை எனது ஆசிரியனாகப் பெற்றதை நான் பெரும் பேறாகக் கருதுகின்றேன். கல்வி கற்பிக்கும் காலத்தில் வெள்ளை உடை போன்று சகல செயற்பாடுகளிலும் மாணவனுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்.

மாணவனுக்காகவே கல்வி, கல்விக்காக மாணவன் அல்ல என்பதற்கு எனது வாழ்வில் நடந்த சம்பவமொன்றைக் கூற விரும்புகிறேன். கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பு கற்கும் காலத்தில் முதல் இரண்டு பாடவேளையும் இரசாயனவியல் வகுப்புகள் நடைபெறும். அப்போதைய சூழ்நிலையில் நான் அனேகமாக நேரம் தாழ்த்திப் போவதால் எனக்குத் தரப்பட்ட பரிசோதனைகளை நிறைவேற்றி முடிக்கவில்லை. எனது நிலையை அறிந்து தனக்கு லீவு கிடைக்கும் வேளைகளில் என்னைக் கூப்பிட்டு அப் பரிசோதனைகளை நிறைவேற்றி பரீட்சை எழுதுவதற்கு வழி காட்டித்தந்தார். இது எனக்கு மாத்திரமல்ல என் போன்ற பல மாணவர்களுக்கு உளம் அறிந்து செய்த செயல்களாகும்.

கல்வி கற்பிக்கும் காலத்தில் பாடசாலை தொடங்குவதற்கு முன், தனது ஓய்வுப் பாடநேரத்தில், பாடசாலை முடிவடைந்த பின் என தனது முழு ஓய்வு நேரத்தையும் மாணவர்களுக்காகவே ஒப்படைத்த ஒரு கல்வியாளன் திரு.அ.பஞ்சலிங்கமே. இன்று அவரிடம் கற்ற மாணவர்கள் எத்தனையோ பேர் எத்தனையோ துறைகளில் தலைவர்களாகவும் நிர்வாகிகளாகவும் ஆசிரியர்களாகவும் இருக்கின்றார்கள். அதில் நானும் ஒருவன் என நினைக்கும் போது எனக்கு எவ்வளவோ பெருமையாக இருக்கின்றது. இன்று அவர் காலால் இட்ட கட்டளையை தலையால் செய்வதற்கு அவரின் மாணவர்கள் எத்தனையோ பேர். அந்த வெள்ளை உடை உடுத்த வெள்ளை மனதில் எத்தனையோ தன்னலமற்ற சேவைகள். நெஞ்சை விட்டு அகலாதவை அவை.

''கல்விச் செல்வம் காலத்தால் அழியாதது. அந்தச் செல்வம் காட்டில் பாறைக்கடியிலே சுரங்கத்திலே இருக்கும் தங்கக் கட்டிகளாக இருக்கக்கூடாது. அதை எடுத்துப் பயன்படுத்திப் பளபளப்புள்ள நல்ல ஒளியுள்ள தங்கமாக ஆக்க வேண்டும்''.

என்று அன்று அறிஞர் அண்ணா கூறிய வாக்கை இன்று இந்தப் பஞ்சலிங்கம் நிறைவேற்றியுள்ளார்.

சிறந்த நிர்வாக அதிகாரியாக:

பல கால இடைவெளியின் பின் திருவாளர் அ. பஞ்சலிங்கத்தை யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக் கல்லூரியின் அதிபராகச் சந்தித்தேன். அப்போது நானும் அங்கு கற்பித்துக் கொண்டிருந்தேன். புதிய அதிபர் பொறுப்பேற்கும் நாளில் அனேகமாக ஒரு ஆசிரியர் கூட்டம். அதில் புதிய அதிபர் பல செயற்திட்டங்களை வெளிவிடுதல் குறைந்தது ஒரு மணி நேர அறுவை. இது வழமையாக நடைபெறும் ஒரு நிகழ்வு. அன்று எமது ஆசிரியர் குழாமும் அதையே எதிர்பார்த்தோம். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. வழமை போல பாடசாலை உரிய நேரத்தில் முடிவடைந்தது. இது எம்மில் எல்லோருக்கும் வியப்பு. பாடசாலை முடிவடைந்த பின்னர் எல்லோரும் சென்று அவருக்கு வாழ்த்து கூறிச் சென்றோம்.

சுமார் இரு வாரங்களின் பின்பே முதன் முதலில் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. இதற்கிடையில் அவ்விரண்டு வாரமும் அவர் சகல வகுப்பறைகளுக்கும் நேரடியாகச் சென்று மாணவர் குறை நிறைகளை அறிந்தார். பாடசாலையின் சகல நிலமைகளையும் அறிந்தார். அதைப் பற்றியே அன்றைய கூட்ட நிகழ்வாக இருந்தது. முதலில் அவர் கூறிய வார்த்தை ''நான் உங்கள் நேரத்தை வீணடிக்கவில்லை. நீங்களும் நேரத்தை குறைவாகப் பயன்படுத்தி கருத்தைக் கூறுங்கள்'' எனக் கூறினார். கூட்டம் எல்லோருக்கும் திருப்திகரமாகவும் நல்ல புரிந்துணர்வோடும் நேரத்தோடும் முடிந்தது.

''கல்வியென்பது மிகவும் சிக்கலான இடை வினைகளைக் கொண்ட தொகுதியென அறிஞர்கள் குறிப்பிடுவர். இந்நிலயில் கல்விப் பிரச்சனைகள் இலகுவாக இனங்கா ணப்படலாம். ஆனால் அவற்றுக்குரிய தீர்வு அத்துணை இலகுவாக இருக்கமாட்டாது.''

பிரச்சனைக்குரிய விடயத்தை அவரிடமே கேட்டு அவரைக் கொண்டே இலகுவாக தீர்க்கக்கூடிய திறமை திருவாளர் அ.பஞ்சலிங்கத்திற்கே உண்டு. அதற்கு எமது பாடசாலையில் நிகழ்ந்த பல நிகழ்வுகளில் ஒன்றை மட்டும் கூறுகின்றேன்.

ஒரு ஆசிரியர் காலையில் முதலாம் பாடநேரம் முடிகிற வேளைகளிலேயே அனேகமாக வேர்க்க விறுவிறுக்க வருவார். கையொப்பமிடும் போது ஏதாவது ஒரு காரணம் கூறுவார். ஆனால் இது நாளடைவில் திருப்தியாக இல்லாததனை திருவாளர் அ. பஞ்சலிங்கம் உணர்ந்தார். எனவே அவரைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். முடிவில் வெற்றியும் கண்டார்.

ஆசிரியருடைய கஸ்டம் இது தான். அவருடைய வீட்டு நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல. இதனால் அவர் 2 கிலோ மீற்றர் தூரம் காலையில் துவிச்சக்கர வண்டியில் சென்று அன்று தனது வீட்டிற்கு தேவையான நீரை சேகரித்து வைத்த பின்பே பாடசாலைக்கு வருவார். வீட்டில் உதவிக்கு ஆட்களில்லை, பிள்ளைகளும் சிறியவர்கள்.

பிரச்சனைக்குத் தீர்வு கண்ட முறை :

ஒரு நாள் குறிப்பிட்ட ஆசிரியரை தனது அலுவலகத்திற்கு கூப்பிட்டார். உமக்குள்ள பிரச்சனையை நான் அறிந்தேன். இதற்கு நீர் எவ்வாறான பரிகாரம் எதிர்பார்க்கிறீர் என வினாவினார். அதற்கு குறித்த ஆசிரியர் எனக்கு வழமையாக வரும் பாட ஓய்வு நேரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் 1 ம் பாடமாக மாற்றினால் நல்லதெனக் கூறினார். உடனடியாக நேரசூசிக்குப் பொறுப்பான ஆசிரியரைக் கூப்பிட்டு அவரின் நேரசூசி மாற்றப்பட்டது. அவ்வாசிரியர் பின்பு மனநிம்மதியோடு பாடசாலைக்கு வந்து சென்றார். அது மாத்திரமன்றி பாடசாலை முடிவடைந்ததும் ஒரு மணி நேரமளவில் நின்று பாடசாலை சம்பந்தமான விடயங்களில் மனச் சந்தோசமாக செயற்பட்டு வந்தார்.

இது போன்று பல நிர்வாக சிக்கல்களை இலகுவாகத் தீர்க்கும் திறனால் இன்றும் அவர் ஆசிரியர்களின் மனதிலும் பாடசாலைச் சமூகத்திலும் மறக்க முடியாத மாமனிதனாக விளங்குகின்றார்.

பாடசாலையின் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நிகழ்வுகளில் கூடுதலாகச் செயற்பட்ட ஆசிரியர்களை நேரடியாகப் பாராட்டியும் மாணவர்களுக்கு பின்னூட்டலாக மாலை நேர வகுப்புகளையும் நடாத்தி பல விதமான மன்றங்களை அமைத்து மாணவரின் பேச்சு, கவிதை, கட்டுரை, நாடக ஆற்றல்களையும் வெளிக் கொண்டுவரப் பாடுபட்டார். உயர்தர மாணவர்களுக்குப் பழைய மாணவர்களினூடாகவே பல மேலதிகமான வகுப்புக்களை நடாத்தி ஒரே முறையில் 200 மாணவர்களில் 128 மாணவர்களை பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதியுடையவர்களாக்கிய பெருமையும் திருவாளர் அ.பஞ்சலிங்கத்திற்கே உண்டு. இன்றும் அக்காலம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு பொற்காலமே. ஏன் அது ''பஞ்சலிங்கம் சகாப்பதம்'' என்று கூறினால் கூட மிகையாகாது.

''நல்ல'' ஆசிரியன் ஒருவன் மாணவரின் நினைவலைகளில் இருந்து ஒரு போதும் மறைவதில்லை''

**இ. பாலச்சந்திரன்**
*ஆசிரியர்*
*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரேஷ்ட மாணவர் முதல்வர் வாழ்த்துகின்றார்



கல்வியையும் தனது முக்கிய சொத்தாகக் கொண்டு ஈழத்தின் தலை நிமிர்கழகமாகவும், தேசிய பாடசாலைகளுள் தலைமையாகவும் விளங்குகின்ற எமது கல்லூரி பழமையும் பெருமையும் கொண்டது. இக் கல்லூரியின் அதிபராக 1990 ம் ஆண்டு பதவியேற்ற எங்கள் அதிபர் தனிமனிதனாக வாழாது பல பொதுப் பணிகளிலும் சமூகப்பணி களிலும் சேவை மனப்பான்மையுடன் தன்னை அர்ப்பணிப்பவர்.

பேராதனைப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று ஒரு சிறந்த விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்து தலைசிறந்த முதன்மை அதிபர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். நாடறிந்த கல்விமானாகத் திகழ்கின்ற அவரின் சகல நடவடிக்கைகளும் மாணவர்களை மையமாகக் கொண்டே அமைந்திருக்கும்.

ஆழ்ந்த சிந்தனைப் பார்வையைக் கொண்ட எங்கள் அதிபரவர்கள் தமது நிர்வாகத்திறமையாலும், அயராத முயற்சியாலும் எமது கல்லூரிக் கல்வியில் மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலும் பல முன்னேற்றங்களைக் கண்டதுடன் தமது சிந்தனையில் உதித்த பல புதிய நடைமுறைத்திட்டங்களைச் செயற்படுத்தியதன் மூலம் எல்லோரினதும் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றுள்ளார்.

எமது கல்லூரியில் சிறந்து விளங்குகின்ற கல்வி, விளையாட்டு, சமயம், மொழி, அழகியற்கலை, சமூகசேவை போன்ற துறைகளுக்கும் கழகங்கள், மன்றங்கள், சங்கங்கள் என்பவற்றுக்கும் பெரும் ஆதரவும், ஆலோசனையும், ஊக்குவிப்பும் அளித்த எங்கள் அதிபர் அவற்றின் மூலம் மாணவர்கள் சிறந்த தலைமைத்துவப் பண்பையும் சேவை மனப்பாங்கையும் பெற உதவி உள்ளார். இவை மூலம் எமது கல்லூரி பல புதிய சாதனைகளை நிலை நாட்ட பலமான அத்திவாரமாகத் திகழ்ந்துள்ளார்.

எளிமையானவராகவும், பழகுவதற்கு இனியவராகவும் திகழ்கின்ற எங்கள் அதிபரவர்கள் கல்விச் சமூகத்திற்கு ஆற்றும் பணிகளுக்காக எங்களுடைய மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் உளம் நிறைந்த நன்றிகளையும் தெரிவிக்கின்றோம். பஞ்சஅமிர்தம் ஆகிய எங்கள் அதிபரவர்கள் நீண்ட ஆயுளுடனும் மிகுந்த மன மகிழ்வுடனும் பூரண உடலுள சுகத்துடனும் நிறைவாக வாழ எல்லாம் வல்ல இறைவனை மனமார இறைஞ்சி நிற்கின்றோம்.

**ச. திருக்குமரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இராச நூலகம்.

## ஊருணி, வாழி பல்லாண்டு!



*ஊருணி யாய்நின் றெமக்கெலாம் உதவும்*
*ஒருப காரி, பே ரெழுச்சிக்*
*காரணி, இளைஞர் செலும் திசை காட்டும்*
*கருவி, கற் பகமெனத் தன்னை*
*ஆரணு கினுமங் கவரவர் தேவைக்*
*கானவை அனைத்தையும் உதவும்*
*பேரறி வாளன் பஞ்சலிங் கப்பேர்ப்*
*பெருமகன் வாழிபல் லாண்டு!*

*நண்பநீ செல்லும் திசைதொறும் கல்வி*
*நாட்டுக; நினக்குரித் தான*
*பண்பினால் எவரும் தலைவணங்குவர்; உன்*
*பணியினால் தமிழினம் உயரும்!*
*உண்பது நாழி தூயவெள் ளாடை*
*உடுப்பதுன் இயல்பென அறிவோம்!*
*மண்பயன் பெறுமா றெம்மிடை நெடுநாள்*
*வாழ்ந்திட வேண்டும் நீ ஐயா!*

சோ.பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சா யுதம்



புதுவுடை கோட்டு சூட்டுப்
புன்னகை தொலைத்த மூஞ்சை
குதிநடை கரத்திற் கம்பு
குறிசுடும் கண்கள் தானே
பொதுவுடை அதிபர்க் கென்ற
பொதுநடை மாற்றி வெள்ளைக்
கதரிலே வந்தார் காந்தி!
கலைப யில்க முகத்திற்கு

கொஞ்சம் நாம்பிந்திப் போனால்
கொஸ்ரலால் எட்டிப் பார்த்து
இஞ்சேடா மச்சான் ''சென்றி''
இருக்குதோ என்று கேட்டால்
''பஞ்சரோ''? சைக்கிள் என்று
''பஞ்சரே''! கேட்பார் அன்பு
கொஞ்சிடும் விழியால் எங்கள்
குற்றங்கள் உணர வைப்பார்

கண்களில் குறும்பு: பேச்சோ
காவியக் கரும்பு: எந்தத்
தொண்டையும் விரும்பு என்று
தோளினைத் தட்டும் தெம்பு
அன்பவர் கம்பு, கொண்ட
ஆளுமை அவரின் அம்பு
சொன்னதைச் செய்யும் பண்பில்
சோராத இரும்பே! நம்பு

## வேறு

இலங்கையினை ஆளுபவர் வந்தால் கூட
''இந்துவினை'' ஆளுவது சுலபம் அல்ல
விலங்குகளே பூச்செண்டாய் மாறும் இங்கே
விரிகின்ற பூக்கள் சில விலங்கும் ஆகும்
கலங்குகிற கண்களுக்குள் பன்னீர் பொங்கும்!?
கனல்சொரியும் தீவிறகும் கண்ணீர் சிந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலந்திவலைக் குள்ளிருந்தும் ''சைவம்''! உண்ட
சீரியரே உம்மனதை உடையே காட்டும்

புன்னகையாம் மகுடியினால் பாம்பை ஆட்டும்
புதுவித்தைக் காரரிவர் புறஞ் சொல்வோரின்
சின்னமனம் பிரித்தறியும் சித்தர், இந்துச்
சீமையிலே மணம்பரப்பும் அத்தர், இந்து
வண்ணமகள் தனைவளர்த்து வாலை ஆக்கி
வாழவைத்துத் துறவுபெற்ற புத்தர்; சின்னக்
கண்ணசைவால் பிரளயங்கள் கலைக்கும் ஆற்றல்
கடவுகளுக்கு மட்டுமல்ல இவர்க்கும் உண்டு

வேட்டொலியே மணியொலியாய் இருந்த காலம்
வெள்ளையுடை வீதிவரப் பயந்த நேரம்
நாட்டினிலே வேலி பயிர் மேயப் பார்க்க
நாக்கிழந்து கமக்காரர் நின்றார் ஓரம்
பேடேறிச்! சேவல்களை மிதித்த காலம்
பெயருக்கு அதிபரில்லை நாங்கள் என்று
சூடேறிப் பாய்ந்த புதுவீஷ்மன்; என்றும்
''சுபநேரம்''! எங்களுக்குத் தந்த தெய்வம்

மெழுகுவர்த்தி என்றும்மைக் கூறிப் போற்ற
மெழுகல்ல உம்முறுதி இரும்பே ஆனால்
பழுதற்ற உம்முடையும் மனதும் பார்த்தால்
பால் நிறமே, பாலென்றால் பலநிமி ஷத்தில்
புழுநெளியும் பொருள், உம்மைப் புஷ்பம் என்றால்
பூத்து சில நாட்கருகும் புகழா கொண்டீர்?
வழியறியேன் உமக்குவமை கூறி வாழ்த்த
வயதுமில்லை எந்தனுக்கு ''தமிழே'' வாழ்க!

ச. முகுந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைகள் சொல்லும் திருநாமம்
## "பஞ்சலிங்கம்"



கழகங்கள் பலவாகிக் காட்சிக்கும் விருந்தாகி
அழகான பெண்ணாகும் அன்னையினை - இளகாத
உறுதியின் உருக்காக உருவாக்கு முங்களினை
அறியட்டும் இந்த அவனி!

பாலகர்க்கு ஒன்றோடு படிப்பதற்கு இரண்டான
நூலகங்கள் தந்ததுவும் நும்பணியே - ஏழு கடல்
தாண்டி வரும் நூலைத் தவளவிட்டெம் கையில்
தூண்டிவிடு(ம்) அறிவின் சுடர்!

மேற்கோடு கிழக்காகி மேதினியை அதிரவிட
நாற்புறமும் ஒலிக்கின்ற நாதமழை - நாம்மகிழ
'பாண்ட்' (band) தந்து எம்மை பார்புகழ வைத்தார்
வேண்டாமே இதற்கு வேறு!

அம்பிட்ட படியெல்லாம் அடிதவறிப் படிப்போர்க்கு
கொம்பியூட்டர் காட்டவென கொண்டு வந்து - கம்பிவைத்த
மூடிய அறையொன்றை முழுதாகக் கணணிக்கு
தேடிய மனிதர் தேன்!

மைதான விரிவாக்கம் மனம்வைத்துச் செய்திட்டு
ஐதாகிப் போனதென்ன அவசரமோ?! - கைமாறிக்
கடைசியிலே பெரிதாக்கி கண்கவரும் பொருளிற்கு
இடைநடுவில் வந்த இடர்!

மெய்யாக அறிவுதரும் மேன்மையுடன் அளவின்றிக்
கையெழுத்து நூல்வந்த காலமையா - ஐந்தவற்றில்
பரிசுபெறச் செய்து படைப்புத்துறை வளர்த்த
கரிசனையே பெரிது காண்!

கி. குருபரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமசுக்கான் திரு. அ. பஞ்சலிங்கம்



யாழ் இந்துக்கல்லூரி மாபெரும் மேதைகளை பணி கொண்ட மேன்மையுடையது. காலமும், நேரமும் சீராக அமையும் போது, கல்வித்தகமைகட்குக் கண்ணியம் காட்டப்படும்போது, ஆட்சி மாட்சியுடையதாவதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

வரலாற்று ஏடுகளைப்புரட்டும் போது கலக்கமும் பின் அமைதியும் உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவான ஒன்றாகவே தெரிகிறது. ஈழவள நாடு இந்த நியதிக்கு புறம்பானதாக இருக்கக்கூடாதா என்று அங்கலாய்த்தாலும், நியதி மாற்றப்படமுடியாத ஒன்றே.

போர்க்காலச் சூழ்நிலையால் நாட்டுக் கல்வி நிலையங்கள் அனைத்தும் தாக்கம் பெற்றன. பல்வேறு காரணங்களால் பெரும் தாக்கம் பெற்ற கல்லூரிகளில் யாழ் இந்துக் கல்லூரியும் ஒன்று. வடமாகாணத்தின் றோயல் கல்லூரி எனப் போற்றப்பட்டது. அரசியல், நிர்வாகத்துறை, கல்வித்துறை போன்றவற்றுக்கெல்லாம் தரமான சேவையாளர்களை ஆக்கித்தந்த கல்வி நிலையமும் இடம் பெயர்ந்தது.

பெயர்ந்தும், நிலை பெயராது;தனியார் கல்லூரிகளை அரசு பொறுப்பேற்குமுன் தன் சகோதரக்கல்லூரியாக விளங்கிய சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கவைத்த திண்மையும் வன்மையும், தன் ஆசிரியர் குழாத்துடன் "First among equals" என்ற தத்துவ நிலையில் நிர்வாகம் செய்ததால் தானே வந்தடைந்த ஒத்துழைப்புக்கும் உரிய செயல் வீரன் பண்பாளன் அதிபர் பஞ்லிங்கம் என்பதை வரலாற்றுண்மை ஆக்கி விட்டார்.

''அதிகாரப் பரவலாக்கல்' என்ற சொற்பதம் இன்று எல்லோர்வாயிலும் அடிபடும் ஒன்றாகும். நடைமுறைப்படுத்தும் போது அதன் புனிதத்தை உளங்கொள்ளமுடியாத சமூகத்தில் பலசிக்கல்கள்தோன்றவே செய்யும். சிக்கல் தோன்றுமே என்று அஞ்சி ஒதுங்காமல் கல்லூரி நிர்வாகத்தில் அதிகாரப் பரவலாக்கலை இதமாகப் புகுத்தி வெற்றி கண்டவர் திரு. அ.பஞ்சலிங்கம்.

அண்மைக்காலத்தில் யாழ் இந்துக் கல்லூரியின் சாதகத்தில் ஒரு மந்தகாலம் என்று நான் நினைப்பதுண்டு. காரணம் அரசக்கட்டிலேறும் அதிபர்கள் தங்கள் திட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தி வெற்றி காண்பதற்கு முன் ''வயது வந்து விடுகிறது''. திரு. பஞ்சலிங்கம் அவர்களின் பரந்த உள்ளம் பாடுபட்டுத்தேடிய கல்வி சார் உயர் அறிவு முற்றாகப் பயன்படுத்தக்கூடியவாய்ப்பை ''காலம்'' அவருக்குத் தந்திருந்தால் கல்லூரிபெரும் பயன் பெற்றிருக்கும். நாமும் அகமிக மகிழ்ந்திருப்போம்

''எப்பவோ முடிந்த காரியம்.'' கொந்தளிக்கும் சாகரத்தில் எதிர் நீச்சல் போட்டுக் கல்லூரியை ''சுகத்துறை சேர்க்கும் சுக்கானாக'' நின்றவர் திரு. அ. பஞ்சலிங்கம்

இவர் சேவையை யாழ் இந்து சமூகம் என்றும் மறவாது.

க. சிவராமலிங்கம்.
*கந்தர்மடம் யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமைத்துவம்

சாதாரணமாக ஒரு மனிதனுக்குத் தான் வாழ்க்கையில் முன்னேறவேண்டும் பிறர் தன்னைக் கணிக்கவேண்டும், பிறர் மீது தான் செல்வாக்குச்செலுத்த வேண்டும்; இவ்வகையான எண்ணங்கள் மனதில் உதித்து உருப்பெறுவது இயற்கை. இவ்வகையான தேவைகளை மனிதன் ஒரு காலகட்டத்தில் நிறைவேற்ற முனைகின்றானென உளவியலாளர்களும் கூறுகின்றனர்.

எனவே பிறர் மீது எமது செல்வாக்கினைச் செலுத்த முனைவது இயற்கையாகவே இருக்கக்கூடிய ஒரு தேவையாகும். இத்தேவையினை பூர்த்திசெய்வதற்கு எமது தலைமைத்துவப்பண்புகளை நாம் வளர்த்தல் அவசியம். முக்கியமாக இளைஞர்கள் தமது சிறு பிராயத்திலேயே இப்பண்புகளை வளர்த்தல் நன்று. இதற்கேற்ற சந்தர்ப்பங்களைப் பாடசாலைகள் உருவாக்கிக் கொடுக்கின்றன.

பொதுவாகத் தலைமைத்துவம் என்றதுமே எமது மனக்கண்ணில் ஒரு அரசியற் தலைவனோ, ஒரு மாவீரனோ தோன்றுவான். இவர்கள் நாடறிந்த உலகறிந்த பெரும் தலைவர்களாக இருக்கலாம். ஆனாலும் நாம் ஒவ்வொருவரும் பல சந்தர்ப்பங்களில் தலைவர்களாக இருந்திருக்கிறோம். அல்லது இருக்க முயற்சித்திருக்கிறோம். அப்படியானால் பல சந்தர்ப்பங்களில் நாம் எமது தலைமைத்துவத்தைப் பிரயோகித்திருக் கிறோம் அல்லது பிரயோகிக்க முயற்சித்திருக்கிறோம்.

இதனை விளங்கிக்கொள்வதற்கு நாம் தலைமைத்துவம் என்றால் என்ன என்பதனை அறிதல் அவசியம். மிக எளிதாக இதற்கு விளக்கம் கொடுப்பதனால் தலைமைத்துவம் என்பது நாம், ஒருவரினதோ அல்லது குழுவினதோ நடத்தையில் எமது செல்வாக்கினைச் செலுத்த முற்படுதலாகும். இச்செல்வாக்கினை ஒரு குழுவின் குறிக்கோளை அடைவதற்குச் செலுத்தும் பொழுது அக்குழுவினரும் இசைந்து அக்குறிக்கோளை அடையச் செய்வதற்கு முனைதல் அவசியமாகும். பிறர் மீது எத்தனையோ சந்தர்ப்பங்களில் நாம் எமது செல்வாக்கினைப் பிரயோகித்து அவர்களின் நடத்தையில் பிறரை வசப்படுத்தியுள்ளோம். இவையாவும் தலைமைத்துவப் பிரயோகம் தான்.

இவ்வாறு நாம் செலுத்த முனையும் தலைமைத்துவம் சில சமயங்களில் வெற்றியிலும் சில வேளைகளில் தோல்வியிலும் முடியலாம். நாம் எமது தலைமைத்துவத்தின் தரத்தினை, பண்பினை, நுட்பங்களை விருத்தி செய்வதனால் எமது சாதனைகளைப் பெருக்கலாம். அளப்பரிய சாதனைகளைக்கூடச் செய்யலாம். சிலவேளைகளில், அதிர்ஷ்டமும் கைகொடுத்தால் நாடும் உலகமும் அறிந்த தலைவர்களாகக் கூட வரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முயற்சியில் நாம் வெற்றிபெற, எமக்கு முன்வாழ்ந்த, வாழுகின்ற, பிறரால் போற்றப்படும் தலைவர்களிடமிருந்தும் சில பாடங்களைக் கற்கலாம். தலைசிறந்த தலைவர்களிடம் காணப்படுகின்ற எவ்வெப்பண்புகள் ஒருவரைச் சிறந்த தலைவராக்கு கின்றனவெனப் பார்ப்போம், அவற்றை இனங்கண்டு நாமும் விருத்தி செய்தல் அவசியமாகும்.

எம்மில் பலரும் மக்கள் மத்தியில் எழுந்து நின்று பேசுவதென்றால் நாத்தழுதழுக்கும். உடல் பதறும். பேச்சுவராது. இது நமக்குமட்டுமல்ல இது போன்ற அனுபவம் மகாத்மா காந்திக்கே ஏற்பட்டது. அவர் ஒரு சட்டத்தரணியாகத் தொழிலாற்றினார். முதல் வழக்கில் வாதிட எழுந்த பொழுது அவருக்குப் பேச்சு வரவில்லை அமர்ந்துவிட்டார். அத்த கையமனிதர் பின்னால் இந்தியாவின் விடுதலைக் கோரிக்கையை எடுத்துக்கொண்டு இங்கிலாந்து சென்று வாதிட்டார். இப்பெரிய மாற்றத்திற்குக்காரணம்: தன்னம்பிக்கை. எதனைக் கண்டு பயப்படுகிறோமோ, அதில் சிறிது சிறிதாக ஈடுபட்டுக் காரியங்களைச் செய்யும் பொழுது தன்னம்பிக்கை படிப்படியாக வளர்ந்து பயத்தினைப்போக்கும்.

எவனொருவனிடம் தன்னம்பிக்கை உள்ளதோ அவனே கடைசிவரை தன் இலட்சியத்திற்காகப் போராடுவான். இலட்சியமென்ற இலக்கு மிகவும் சக்தி வாய்ந்ததொன்று. தான் எடுத்துக்கொண்ட இலட்சியத்தை மையமாகவைத்து, மக்களின் உள்ளங்களில் இந்த இலட்சியத்தீயினை மூட்டி, அவர்களை ஒருமுகப்படுத்தும் வல்லமை தலைவனுக்குண்டு.

தலைவனாக இருக்கும் ஒருவன் பிறருக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றான். அவன்மீது நம்பிக்கைவைத்து மக்கள் பின்தொடருகின்றனர்.

தாழ்வு மனப்பான்மையும் நம்பிக்கையைக் குறைத்து விடும். நம்மைவிட அறிவிலும் ஆற்றலிலும் கூடிய எத்தனையோபேர் இருக்கக்கூடும். இருக்கட்டுமே! நாமேன்! அவர்களைப் போலில்லையென்று அங்கலாய்த்துக் கொள்ள வேண்டும். நான் கிராமத் தவன், நான் ஏழை, நான் உயரமற்றவன், நான் அழகற்றவன், நான் விவேகமற்றவன் இவ்வாறு பலரிடம் நிறையத்தாழ்வுச் சிக்கலுண்டு. எத்தனையோ பேர் கூட்டத்தில் முன்வரிசையில் உட்கார்ந்து கொள்ளமாட்டார்கள், கடைசிவரிசை தேடுவார்கள்.

எனவே எமது முயற்சியினாலும் தலைமைத்துவ நுட்பங்களை அறிவதாலும் நாம் எமது தலைமைத்துவப்பண்புகளை ஓரளவேனும் வளர்ப்பது சாத்தியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்களஞ்சியம்: செப்ரம்பர் 93

## ஒரே தண்டனையா?

ஒரு சிறுவனின் அங்கலாய்ப்பு: ''அண்ணாவும் நானும் சில சமயங்களில் ஒரே தவறைத்தான் செய்வோம். அப்போது அப்பாவோ என்மீது மிகக் கண்டிப்பாக இருப்பார். ஆனால் அண்ணாவிடம் பட்டும் படாததுமாகத்தான் தவறைச்சுட்டிக்காட்டுவார்.

இதுபோதாதென்று அன்று ஒரு நாள் நான் பாடசாலைக்குப் பிந்திச் சென்றேன். அதேநேரந்தான் உயர்தரவகுப்பில் கற்கும் ஓர் அண்ணாவும் வந்தார். ஒழுக்கத்தைக்கவனிக்கும் ஆசிரியர் தடியால் இரண்டு அடி தந்தார், ஆனால் அந்த அண்ணாவுக்கு அடிக்கவில்லை. கண்டிப்பான சிலவார்த்தைகளைக் கூறி அவரை அனுப்பிவிட்டார். 'ஏன் இந்தப்பாகுபாடு, இந்த வஞ்சனை' என நான் என்மனதில் கூறிக்கொண்டேன். ஒரே தவறுக்கு இரு வகையான தண்டனையா?''

பிறிதொரு சந்தர்ப்பத்தில் இன்னொரு மாணவனின் எண்ண ஓட்டம்: 'நான் எப்பொழுதும் வகுப்பில் முன்னிலையில் நிற்கும் மாணவன். தரப்படும் வேலையைச் செவ்வனே செய்து முடிக்கும் ஆவலும் ஆற்றலும் ஈடுபாடும் என்னிடமுண்டு. எனது வகுப்பில் பலதரப்பட்ட மாணவர்கள் உள்ளனர். சிலருக்கு கற்க வேண்டுமென்று ஆவலோ ஆற்றலோ இல்லை. ஏனோ தானோ என்றுதான் வகுப்பில் இருப்பார்கள், ஆசிரியரும் பலமுறை அவர்களைக் கண்டித்தும் பலன் கிடைக்க வில்லை. ஒரு நாள் வீட்டுவேலை செய்யாத மாணவர்களை எழுந்து நிற்கும்படி கூறினார். நானும் எனது சுகவீனம் காரணமாக வீட்டுவேலை செய்யாமையால் எழுந்து நிற்கவேண்டியிருந்தது. அன்று தனது முயற்சிகள் வீண்போவதாக நினைத்து ஆசிரியர் கோபமடைந்து ஏழுந்து நின்ற எல்லோருக்கும் நன்றாக அடித்தார். எனக்கும் கூடத்தான். பேசாது தண்டனையைப் பெற்றேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இத்தவறை இனிமேல் செய்யாதே யென்று ஒரு வார்த்தை அன்பாகக் கூறியிருந்தால் போதும்' இவ்வாறு நொந்து கொண்டான்.

முதலாவது காட்சியில் ''ஒரே குற்றத்திற்கு இருவகையான தண்டனையா?'' என சிறுவன் ஒருவன் மனம் வெதும்புகிறான். இரண்டாவது காட்சியில்'' ஒரே குற்றம் வேறுபட்ட அளவு நிலையில் இருந்தபோதிலும் ஒரேவகையான தண்டனையா?'' என ஒரு மாணவனின் உள்ளம் குமுறுகிறது.

ஒருவர் மீது நாம் பிரயோகிக்கும் நடத்தையின் வகை அவருக்கு ஒரு செயற்பாட்டிலுள்ள ஆவல், ஆற்றல், ஈடுபாடு, திறமை, அனுபவம், விளக்கம் போன்றவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படும். அவ்வாறு பார்க்கும் பொழுது உயர்தரவகுப்பு மாணவனொருவன் பிரச்சினையைச் சுலபமாக விளங்கக்கூடும். எனவே கீழ் வகுப்பு மாணவனிலிருந்து வேறுபட்ட தண்டனை வழங்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் இரண்டாவது காட்சியில் இங்கே கொடுக்கப்பட்ட அளவு கோலைக்கொண்டு பார்க்கையில் ஆசிரியர் பாதிக்கப்பட்ட மாணவன் மீது வேறுபட்ட நடத்தையைக் கையாண்டிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்களஞ்சியம்: செப்ரம்பர் 92

## *பிரச்சினை யாருக்கு?*

பிறருடைய பிரச்சினைகளை நாம் எமது தோளில் போட்டு அல்லற்படுதல் சகசம். சிறிது சிந்தித்துச் செயற்படுவோமாயின் இதனைத்தவிர்த்துக் கொள்ளலாம். அவசரபுத்தி ஆபத்தில் மாட்டும் என்பார்கள்.

குடும்பத்தில் நடைபெறுமொரு சம்பவத்தைப் பாருங்கள்

மகன்: (அம்மா மீது குற்றஞ்சாட்டி எரிந்து விழுகிறான்) ''அம்மா, உங்களுக்குத் தெரியும், நீலமென்றாலே எனக்குப்பிடிப்பதில்லையென்று. தெரிந்தும், நீங்கள் எனக்கு இன்னுமொரு நீல சேட்டையே வாங்கி வந்திருக்கிறீர்கள். நீங்களே போடுங்கள்.''

அம்மா: (பாதிக்கப்பட்டவளாக)

''நான் உன்னைப் பொறுத்தவரையில் எதனையுமே சரியாகச் செய்வதில்லை. என்னத்தைச் செய்தாலும் நன்மையில்லை.''

இப்பொழுது அம்மாவின் முதுகிற்தான் பிரச்சனை உள்ள மூடை. அவர் பேசாதிருக்கலாம், போதாக்குறைக்கு அப்பாவாலும் இவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அப்பா:(அம்மாவைக்காப்பாற்றி மகனைச் சாடுகிறார்)''மோகன் நீ அம்மாவுடன் என்ன துணிவில் இப்படிப் பேசுவாய்? அம்மா சமைத்த சாப்பாடும் உனக்கு வேண்டாம். போய்க்கிட''

மகன்:(பாதிக்கப்பட்டவனாக மனம் வெந்தபடி கட்டிலில் முகங்குப்புறப் படுத்தபடி) ''என்னை எப்பொழுதும் உண்மை பேசும்படி சொல்கிறீர்கள். உண்மையைச் சொன்னால் எரிந்து விழுகிறீர்கள். நான் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியுமா?''

இப்பொழுது மகனின் தலையில் வந்தது பிரச்சினை. அம்மாவால் மகன் வேதனைப்படுவதைப் பொறுக்கமுடியவில்லை.

அம்மா: (மகனைக்காப்பாற்றும் நோக்குடன்) ''மோகன், அப்பா இருக்கட்டும் நீ வந்து சாப்பிடு, ஒரு சேட்டிற்காக நாங்கள் மண்டையை உடைப்பானேன்?'' (அப்பா மீது கணை வீசுகின்றாள்)

''நீங்கள் எப்பொழுதும் மோகனுடன் கடுமையாகத்தான் இருக்கின்றீர்கள், தொட்டதற்கும் கடிந்து விழுகின்றீர்கள், இப்பொழுது அவன் உங்களைத் திட்டிக் கொண்டுதான் இருப்பான்''

இப்பொழுது பிரச்சினை எங்கே? அப்பாவின் முதுகில்!

அப்பா மனைவியை நோக்கி ''என்னப்பா, நான் மோகன் உம்மோடை பேசியதைப் பொறுக்க முடியாமல்தான் தலையிட்டேன். இப்ப என்னடா வென்றால் நீரும் சேர்ந்து என்னிலே பிழைபிடிக்கின்றீர்''

மகன்:(அப்பாவைக் காப்பாற்றுவதற்காக) ''அம்மா சும்மா இருக்க மாட்டீர்களா? அப்பா களைத்துப்போய் இருக்கிறார். அவருக்குத் தலையிடி கொடுக்கிறீர்கள்!''

இப்படியே மாறிமாறிப் பிரச்சினையை முதுகில்போட்டுச் சுமைதாங்காது எத்தனைபேர் வேதனைப்படுகிறார்கள்! இதிலிருந்து விடுதலை பெறச் சிந்தித்துக் கதையுங்கள், வேண்டிய போது மௌனம் சாதியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோரே
## தெரிந்து கொள்ளுங்கள்

நேரம் கழித்து வீட்டிற்கு வந்த தன் மகளை நோக்கி ஒரு தாயார் சப்தமிடுகின்றார். அதில் ஒரு பகுதி வருமாறு: ''நான் உன்னைச் சில நாட்களாக கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். உன்னுடைய போக்கு அளவுக்கு மிஞ்சி விட்டது. ரியூசன் என்று வெளிக்கிடுகிறாய், விளக்கு வைத்து இவ்வளவு நேரம் செல்லுது; வீட்டுக்குவர, என்ன செய்கிறாயோ தெரியாது? வரவர நீ எடுக்கிற மாக்சும் (புள்ளிகள்) அஞ்சு, பத்து எண்டுதான் இருக்கு''.

இந்தத் தாயார் காலந்தாழ்த்தி மகளைத் திருத்த அல்லது கட்டுப்படுத்த முயல்கின்றார். உரிய காலத்தில் அவர் என்ன செய்திருக்கவேண்டும்? கீழே தரப்பட்டுள்ள 'ஒழுக்கக் கட்டுப்பாடு' தொடர்பான குறிப்புகளை அல்லது வழிகாட்டிகளை அவதானிப்பின் மற்றய பெற்றோருக்கும் நலந்தரும்.

ஒழுங்கினை நிலைநாட்டத்தலையிடும் பொழுது உணர்ச்சிகளை வெளியிடுகையில் 'ஒரு பிரச்சனை உண்டு' என்பதனைக் காட்டும் அளவிற்கு மட்டுமே வெளியிட்டு, பொதுவாக அமைதியைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

ஆளைக்கண்டிக்காது செயலை மட்டும் கண்டித்தல் வேண்டும். அதே நேரத்தில் அச்செயலைக்குறிப்பாகச் சுட்டிக்காட்டுதல் வேண்டுமேயல்லாது பொதுவாகக் கூறக்கூடாது.

உதாரணமாக 'நீ மூன்றாம் தவணையில் கணிதத்திற்கு 30 புள்ளி எடுத்திருக்கிறாய். சென்றதவ்ணையிலும் பார்க்க குறைவாக எடுத்துள்ளாய்' எனக் கூறலாமே தவிர உன்னுடைய பரீட்சை பெறுபேறுகள் மோசமாகப் போய்க் கொண்டிருக்கின்றன' எனக் கண்டிக்கக்கூடாது. அதுவுமன்றி ஒரு செயற்பாடு முடிந்ததும் தாமதியாது அது சரியாக இருப்பின் அதில் சம்பந்தப்பட்டவரை உடனேயே பாராட்டல் வேண்டும். தவறு இருப்பின் தவற்றைச் சுட்டிக்காட்டித் கண்டித்தல் அவசியம். வழமையாக நாம் கண்டிக்கும் போது நித்திரைக்குப் போகும் போது கண்டிக்கிறோம். அப்படி அந்த நேரத்தில் கண்டித்துவிட்டு சில சமயங்களில் பிள்ளை நித்திரைவிட்டு அடுத்த நாள் காலையில் எழுந்த பின்பும் அது தொடரும். அது தவறு; கண்டித்தல் நிகழ்ச்சி அரை நிமிடங்களுக்கு மேல் நீடிக்காது பார்த்துக்கொள்ளல் வேண்டும். அத்துடன் கண்டித்தபின் அவரிடம் சில நல்ல முன்னேற்ற செயற்பாடுகள் காணப்படின் சுட்டிக்காட்டிப் பாராட்ட வேண்டும்.

ஒரே நடத்தைக்கு ஒரே விதமான ஒழுக்கக் 'கட்டுப்பாட்டை' நிலை நிறுத்தவேண்டும். குறைந்த புள்ளிகளைப் பெற்றமைக்காக ஒரு முறை கண்டித்து விட்டு மறுமுறை அவ்வாறின்றி பாராமுகமாக இருத்தலாகாது. பயமுறுத்தலாகாது. ஏனெனில் பயமுறுத்தி விட்டு அதனைச் செயற்படுத்தா விட்டால் பின்பு அவற்றை அலட்சியம் செய்வார்கள். எப்பொழுதும் 'ஒழுக்கக்கட்டுப்பாடு' நியாயமாகவே இருத்தல் வேண்டும்.

இப்பொழுது அந்த தாயாரின் கண்டிப்பிலுள்ள குறைபாடுகளை நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்களல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்களஞ்சியம்: பெப்ரவரி 94

## பரீட்சைகள் படுத்தும் பாடு

கொரிய நாட்டிலே பரீட்சைகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. ஒரு குடும்பத்தில் பிள்ளை பரீட்சையில் சித்தியடைந்தால் இந்நிகழ்வு அக்குடும்பத்திற்கு கௌரவத்தையும் அந்தஸ்தையும் தேடிக் கொடுக்கிறது. பிள்ளை சித்தியடையா விட்டால் அதன்பேறாக அக்குடும்பத்திற்கு அவமானம் ஏற்படுகின்றது. ''உன்னால் குடும்பத்திற்கு அவமானம்'' ஏற்பட்டதாக வைதபடியே இருப்பார்கள். இந்தவேதனையைத் தவிர்ப்பதற்காக அப்பிள்ளைகள் 4-5 மணித்தியாலங்கள் மட்டுமே துயில் கொண்டு மீதிநேரம் மீள மீள பாடங்களை மனதில் பதிப்பதற்கு செலவிடுவார்கள். அவர்களுக்குப் பொழுதுபோக்குக் கள், விளையாட்டுக்கள், ஓய்வு எவையும் இல்லை. ஒரு நாகரிகமான சித்திரவதைதான்.

ஆசிய நாடுகள் பலவற்றிலும் இதேநிலைதான். பரீட்சை முடிவுகளே அரசாட்சி செய்கின்றன. சிங்கப்பூரில் மாதம் ஒரு மாணவன் வீதம் பரீட்சையின் அழுத்தத்தினால் தற்கொலை செய்வதாக ஒரு செய்தி. எமது நாட்டிலும் இதேநிலைதான். பத்து வயது நிரம்பிய ஆண்டு 5 இல் கற்கும் மாணவன் ஒருவனின் நிலையினைப் பார்ப்போம். துள்ளித்திரிய வேண்டிய வயதினிலே பாடசாலைக்கும் ரியூட்டறிக்கும் அலைகின்றான். உறங்குகின்ற சிலமணிநேரம் தவிர்ந்த ஏனைய நேரம் கணிதத்தையும் தமிழையும் மாறிமாறித் திரும்பத்திரும்ப ''மனப்பதிவு'' செய்கின்றான். இத்தனையும் எதற்காக? பெற்றார் தாம் விரும்பும் கல்லூரியில் பிள்ளையை அனுமதிப்பதற்காகவும் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவுந்தான்.

இங்கே பெற்றார் ஒரு தவறு செய்கின்றனர். அவர்களின் பிள்ளை கல்வியில் கெட்டித்தனமானதென்றும் நிச்சயமாக ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையுமென்றும் தாமாகவே மதிப்பீடு செய்து கொண்டு, பிள்ளைக்குப் பல நம்பிக்கைகளை வளர்த்துவிடுவார்கள். அவற்றிலொன்று விரும்பிய கல்லூரியில் அனுமதி. சிலவேளைகளில் இந்த நம்பிக்கை தவிடுபொடியாகி பிள்ளைக்கு உளரீதியான பாதிப்பும் ஏற்படுகின்றது.

பிள்ளை உண்மையிலேயே விவேகமான, கெட்டித்தனமான மாணவனாக இருக்க லாம். அவன் பரீட்சை மண்டபத்திலே என்ன நிலையில் பரீட்சை எழுதுகின்றான். பத்துவயதுப்பாலகன் புதியதொருபாடசாலையிலே பழக்கமில்லாத சூழலிலே அறிமுகமில்லாத ஆசிரியர்களின் மேற்பார்வையில் பரீட்சை எழுதுகின்றான். மேலும் பரீட்சையில் நன்றாகத்தேற வேண்டுமென்ற ஏக்கம், சித்தியடையாவிட்டால் விரும்பிய கல்லூரியில் அனுமதி இல்லை; அப்பா, அம்மா, ஆசிரியர் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்; இது போன்ற சிந்தனைகள், மன அழுத்தங்கள் இவற்றின் மத்தியில் அப்பாலகன் பரீட்சைக்குத்தோற்றுகின்றான். இவை அனைத்தும் பிள்ளையின் மனோ நிலையைப் பரீட்சை மண்டபத்தில் பாதிக்கின்றன. இதன் விளைவாகச் சில மாணவர்களால் சரியாக விடையளிக்கமுடிவதில்லை.

சென்றமாதம் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியானதும் அதில் சித்தியடையாத இரு மாணவர்களை அவர்களின் அன்னையர் என்னிடம் கூட்டி வந்தனர். பிள்ளைகள் கண்ணீருடன் காணப்பட்டனர். அப்பிள்ளைகளுக்கு அவர்கள் விரும்பிய கல்லூரி கிடைக்குமென பெற்றார் நம்பிக்கை ஊட்டியிருந்தனர். அவர்களினுடைய ஆண்டு 5 வகுப்புத் தேர்ச்சி அறிக்கையினை பார்வையிட்டேன். ஒவ்வொரு தவணையும் தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் ஒவ்வொன்றிலும் 85க்கு குறையாத புள்ளிகள். பிள்ளைகளின் நிலை பரிதாபமாக இருந்தது. இதுவே எம் சிறார்களின் நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்களஞ்சியம்: ஆகஸ்ட் 92

## வதைக்கும் வார்த்தைகள்

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நல்வழிப் படுத்துவதாக எண்ணி அடிக்கடி வார்த்தைகளால் அவர்களின் மனங்களை வதைக்கிறார்கள். எதிர்காலத்தைச் சிதைக்கிறார் கள்.

''ராமு.....நீ சோதனையில் ஐந்தும் பத்துமாகப் புள்ளிகள் எடுத்திருக்கிறாய்..... உனக்கும் படிப்புக்கும் வெகுதூரம்.....உன்ர தம்பியைப் பார் உன்னைப்போலா...... வகுப்பில் அவன்தான் முதல்.....இனி நீ வகுப்புக்கூட்டத்தான் சரி.....''

''ராமு!.....உனக்கு எல்லாத்திலும் ஒரு பதட்டம். கொஞ்சமேனும் பொறுப்பில்லை...... அக்கறையில்லை. மேசையிலே தேனீர்க் கோப்பையை வைக்கிறன் எண்டு மேசைப்புத்த கமெல்லாத்தையும் நனைச்சு நாசப்படுத்திப் போட்டாய்.... உன்னை என்ன செய்யிற தெண்டுதான் தெரியேல்ல....''

''ராமு....அவன் தம்பிபோலக் கெட்டிக்காரனல்ல; அவனிட்டக் கனக்க எதிர்பாராதீர்கள்...''

''ராமு!.....என்ன விசர்வேலை செய்திருக்கிறாய்....உன்ர தம்பியெண்டா உப்படி நடப்பானே?''

ராமுவை அவன் பெற்றோர்கள் விமர்சிக்கும் முறையிது. இவற்றைக் கேட்கும் அவன் மனோநிலை எவ்வாறு தொழிற்படும்?

அவன் தன்னிரக்கத்திற்கு ஆளாவான்

தாழ்வுச்சிக்கலுக்கு உட்படுவான்.

என்னால், எதையுமே-எப்போதுமே செய்துமுடிக்க முடியாது என்று எண்ணுவான்.

வாழ்க்கையில் ஒதுங்கிப் போக முயல்வான்.

தான் குறைகளால் உருவாக்கப்பட்டவன் என்றுணரத் தலைப்படுவான். தன்னை உலகில் ஈன்ற பெற்றோர்களை வெறுக்கத் தலைப்படுவான். சிலசமயம் தன்னையே வெறுக்கத் தலைப்படுவான். இந்த ராமு வாலிபனாகி எப்படியோ ஒரு வேலையில் அமர்ந்தபின் அவன் செயல் எப்படியிருக்கும்?

1. ''இந்தச் செயற்திட்டம் பற்றி சிறிது கவலைப்படவேண்டும். இன்னும் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

2. நான் எதனையும் சிக்கலாக்கும் ஒருமடையன். தயாரித்த அறிக்கையைக்கூட எங்கேயோ தவறவிட்டுவிட்டேன்.

நான் எப்போதுதான் திருந்துவனோ?

நிச்சயம் அவனது சிந்தனை இரண்டாவதாகத்தான் இருக்கும். பெற்றோர்களே கொஞ்சம் கவனமாகப் பிள்ளைகளை வழி நடத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம்:10.12.1994

## விளையாட்டு மைதானம்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

முரளி:-

நாளை ஏ/எல் ரிசல்ற் வருகுதாம். நான் நல்ல ரிசல்ற் எதிர் பார்க்கிறேன். அப்படிவந்தாலும் சரி, வராவிட்டால் சரி, எனக்கு எத்தனையோ வழியிருக்கு. நான் கவலைப்படமாட்டேன்.

சந்திரன்:-

எனக்கு நல்ல ரிசல்ற் வராது போனால் என்ன செய்வதென்றே தெரியவில்லை. சாகத்தான் வேண்டும்.

ஆம், நாளை க.பொ.த. (உ/த) பரீட்சைப்பெறுபேறுகள் வெளிவர உள்ளதாக இன்று வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது. அதனை காதில் வாங்கியதும் முரளியினதும், சந்திரனதும் எண்ண அலைகள்தான் இங்கே சித்தரிக்கப்பட்டுள்ளன.

முரளியும், சந்திரனும் ஒன்றாகவே கல்விகற்று வந்த நண்பர்கள். அவர்கள் கூறுவதனை தொடர்ந்து கேட்போம்.

சந்திரன்:-

''ஆண்டு 6 இல் சேர்ந்தது முதல் தவணைப் பரீட்சையில் முதல் நிலை பெற்றதும் என்னை ஆசிரியர்கள் பாராட்டினர். இப்பாராட்டு எனக்கு ஒரு உற்சாகமாக அமைந்தது. இப்பாராட்டினைத் தொடர்ந்து பெறுவதற்காக எனது முழுநேரத்தையும் கல்விகற்பதிலேயே செலவிடுவேன். பாடசாலை விட்டு வீடு சென்றதும் மீண்டும் எனது புத்தகங்களுடன் தான் எனது பொழுதினை கழிப்பேன். என்னை எல்லோரும் ''நல்ல பிள்ளை'' என்று பாராட்டுவார்கள். முரளி வீட்டிற்கு நான் செல்லும் போதெல்லாம் அவனின் தாயார் கூறுவார்கள் ''முரளி, சந்திரனைப்பார். அது இது என்று திரியாமல் என்ன அடக்கமா வீட்டிலிருந்து படிக்கிறான்'' இதனைக்கேட்டு நான் பெருமிதமடைவேன். இருந்தபோதிலும் முரளியின் சில குணாதிசயங்கள் என்னைக்கவர்ந்தன. நாலு நண்பர்கள் நாங்கள் கூடிக்கதைக்கும் பொழுது எப்போதும் முரளியின் கருத்தே எடுபடும். யாரையும் தன்வசப்படுத்திக் கொள்வான். எந்த ஒரு நிலையிலும் தீர்க்கமான ஒரு முடிவிற்கும் வந்து விடுவான். நானோ, அம்மா காலையில் தேனீரோ, காப்பியோ வேண்டுமெனக் கேட்டாலே மனதில் ஒரு போராட்டம் நடத்தித்தான் பதில் கூறுவேன். க.பொ.த.(சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் வந்ததும் உயர் தரவகுப்பில் கணிதப்பிரிவுக்குச் செல்வதா, உயிரியல் பிரிவுக்குச் செல்வதா? இந்தப்போராட்டம் தீர ஒரு மாதமானது. முரளியோ மறுநாளே கூறிவிட்டான். கணிதப்பிரிவிற்குத்தான் செல்வதென்று''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளி:-

''நான் வகுப்பில் நல்ல கவனம் செலுத்துவேன். பாடசாலையில் சேவைக்கழகம் ஒன்றில் சேர்ந்து நாலு ஆண்டுகளின்பின் அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அங்கத்தவர்கள் அத்தனை பேரும் என்னுடன் ஒத்துழைப்பார்கள். பின்னேரமென்றால் எனக்கு விளையாட்டு மைதானத்திற்குப் போகாவிட்டால் இருப்புக்கொள்ளாது. துடுப்பாட்டம், உதை பந்தாட்டம் ஆகியவற்றில் பங்குபற்றுவேன். இரண்டு குழுக்களிலும் தலைவனாகவும் இருந்திருக்கிறேன். ஒருமுறை எமது சேவைக்கழக அங்கத்தவர்கள் நால்வரை கொழும்பில் நடக்கவிருக்கும் மாநாடொன்றிற்கு அழைத்திருந்தார்கள், கிளாலி கடந்து கொழும்பு செல்வதிலுள்ள கஷ்டங்களையும் அங்கு கொழும்பில் என்போன்றோ ருக்கு இருக்கும் தொல்லைகளையும் நினைத்துச் சகலரும் பின்வாங்கினர். செல்வதா? விடுவதா? என தடுமாறினர். அவ்வேளையிலே மாநாட்டிற்குச் செல்வதால் ஏற்படும் நன்மைகளை உணர்ந்த நான் கொழும்பு செல்வதெனத் தீர்மானித்து அவர்களைக் கூட்டிச் சென்றேன். நாம் திரும்பிவந்ததும்தான் நான் எடுத்த முடிவைப் பாராட்டினார்கள்.

சந்திரன் எனது நண்பன். படிப்பில் மிக விவேகி. ஆனால் எந்தப் புதிய முயற்சியிலும் துணிந்து இறங்கமாட்டான். யோசித்து யோசித்துத்தான் காலடி எடுத்து வைப்பான். என்ன முடிவு வருமோ என்று ஏங்கிக் கொண்டேயிருப்பான்''

முரளி, சந்திரன் ஆகிய நண்பர்களின் கூற்றுகளைக்கேட்டீர்கள். முரளியிடம் காணப்படும் முன்முயற்சி, தற்துணிவு, தன்னம்பிக்கை, விரைவாகத்தீர்மான மெடுக்கும் இயல்பு, தலைமைத்துவப்பண்பு ஆகியவற்றிற்கு உரிய காரணங்கள் யாவை?

விளையாட்டு மைதானத்திலே அவன் பெற்ற பயிற்சிதான் காரணம். குழுவின் தலைவனாக அமைந்த முரளி தனது குழுவினை முன் நடத்திச் செல்ல வேண்டும். குழுவின் ஒத்துழைப்பினையும் பெறவேண்டும். மைதானத்தில் எதிர்க்குழுவுடன் மோத இறங்கிவிட்டாலோ சகல தீர்மானங்களும் உடனுக்குடன் எடுக்க வேண்டிய பொறுப்பு அவனிடம், அதற்குத் தற்துணிவு, தன் நம்பிக்கை ஆகிய லட்சணங்களை உள்ளடக்கிய வனாக அவன் இருத்தல் அவசியம். இத்தகைய அனுபவங்களைப் பெற்ற முரளியின் நடத்தை மேலே சுட்டிக்காட்டியது போல் அமைவதில் ஆச்சரியம் இல்லைத்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்: 23.10.95

## தனியார் கல்வி நிறுவனங்கள் சூழ்நிலைக்கேற்ப பாடசாலைகளுடன் இணைந்து செயற்படலாம் – யாழ் இந்து அதிபர் தெரிவிக்கும் யோசனை

இன்று அதிபர்களின் நிலைபரிதாபத்துக்குரியது. மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படாதவகையில் பாடசாலையைச் செயற்படுத்துவதற்காக அதிபர்களில் பலர் எதிர் நீச்சல் போடவேண்டியுள்ளது. இந்நீச்சல் எவ்வளவு காலத்துக்குச் சாத்தியமாகும் என்பதே அடுத்தவினா. இங்கு நான் குறிப்பிடுவது ஆசிரியர் இன்றிக்காணப்படும் வகுப்பறைகள், அதனால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு. இந்நிலை அதிபரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. சாதாரணமாக ஆசிரியர் தமது சொந்த லீவினைப் பயன்படுத்துவதை நான் இங்கு குறிப்பிட வில்லை.

அரசாங்கப்பாடசாலைகள் வருடத்தில் 190 நாட்களுக்குக் குறையாமல் நடைபெறும். ஆனால் ஆசிரியர் எடுக்கும் சொந்தலீவு வேறு வழியின்றி பாடசாலை நேரத்தில் நடத்தப்படும். இணைப்பாடச் செயற்பாடுகள் தவணைப் பரீட்சைகளும் விடைத்தாள் மதிப்பிடுதலும். சீரற்ற கால நிலை போன்றவற்றினால் 60-70 நாட்கள் வரை கற்பித்தல் நடந்து முடியாதுள்ளது.

எனவே ஏறத்தாழ 170 நாட்களில் கற்பித்து முடிக்க வேண்டிய பாடவிதானத்தை 125 நாட்களில் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இதனால் விரைவாகக் கற்பிக்க வேண்டியுள் ளது.

ஆசிரியர்கள் பாடசாலையில் சேவையாற்றும் அதேவேளையில் அவர்கள் தங்கள் தொழில்சார் வளர்ச்சியினையும் பெற அதிபர்கள் உதவவேண்டும். இதற்கு எந்த அதிபரும் தடையாக இருக்கக்கூடாது. வெளிவாரிப்பட்டப்படிப்பு, வார இறுதி ஆசிரியப் பயிற்சிநெறிகள் போன்ற பல சந்தர்ப்பங்கள் ஆசிரியர்களின் தொழில்சார் விருத்திக்கு உண்டு.

இதில் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் தங்கள் வேலை முடிந்தால் போதும் பாடசாலைகள் எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன என்ற நிலையில் செயற்படுகின்றன. பாடசாலை விடுமுறைகள் மொத்தமாக மூன்று மாதங்களுக்கு உண்டு. இந்த விடுமுறைகாலத்தில் அவர்கள் தங்கள் பரீட்சைகளை நடத்தலாம். அப்படி நடாத்துவார்களானால் சம்பந்தப்பட்ட ஆசிரியர் ஒரு மாதம் பாடசாலைக்கு வருகை தராதுநிற்கவேண்டி ஏற்படாது.

மேலும் ஆசிரியர்கள் பாடசாலைக் கற்பித்தலில் இருந்து வேறு பதவிகளுக்கு விடுவிக்கப்பட்டுச் செல்லும் சந்தர்ப்பங்களும் பல. இவ்வாறாக விடுவிக்கப்பட்டுச் செல்லும் ஆசிரியரின் வெற்றிடம் பல மாதங்களாக நிரப்பப்படுவதில்லை.

இக்காரணிகளால் 125 நாட்கள் கற்பித்தல் மேலும் சில பாடங்களுக்குக் குறைகின்றது.

இழக்கும் நாட்களுக்குப்பதிலாக மேலதிக வகுப்புகளை பாடசாலை நடை பெறாத நாட்களில் ஒழுங்கு செய்தால் அதற்கு மாணவர்கள் வரவு குறைவாகக் காணப்படுகின்றது. ஆசிரியர்களும் இவ்வகையான வகுப்புகளை நடத்துவதில் ஆர்வம் காட்டுகின்றார்கள் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதியவளம் உள்ள பாடசாலைகள் ஆளணிப்பற்றாக்குறையை ஓரளவு தீர்க்கக்கூடியனவாக உள்ளன. குறுகியகாலத்துக்குள் தங்கள் பணத்தில் ஆளணியினரை அமர்த்தி நிலைமையை ஓரளவு சீராக்கலாம். நெடுநாட்களுக்கு இது சாத்தியமில்லை.

இந்தச்சூழலிலும் கூட மீதிறன் (அதிவிவேகம்) கூடிய் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெறத்தான் செய்வார்கள். அவர்களுக்கு கற்பித்தலில் மீள வலியுறுத்தல், பரிகாரக் கற்பித்தல் போன்றவை அவசியமில்லை. இருந்த போதிலும் போட்டிப் பரீட்சைக்குத் தோன்றும் மாணவர்கள் தங்கள் உளரீதியான தேவையினையும், போட்டியில் பிறரை முந்த வேண்டிய தேவையினையும் பூர்த்தி செய்வதற்காக மேலதிகமாகக் கற்க வேண்டிய தேவை உண்டு. இதற்காக அவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்ல வேண்டி ஏற்படுகின்றது.

பெரும்பாலான மாணவர்கள் அதிவிவேககிகள் (மீதிறன் கூடியவர்கள்) என்ற பிரிவில் அடங்கமாட்டார்கள். இவர்களுக்குப் பரிகாரக் கற்பித்தல், மீள வலியுறுத்தல் போன்ற கற்பித்தல் யுக்திகள் கையாளப்பட வேண்டும். கற்பித்தல் நேரம் போதாமையினால் இந்த யுக்திகளை பாடசாலையில் முற்று முழுதாகக் கையாள முடியாதுள்ளது. எனவே இம்மாணவர்கள் தங்கள் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்காக தனியார் கல்வி நிலையங்களை நாடுகின்றனர்.

தனியார் கல்வி நிறுவனங்களும் இப்பொழுது செயற்படும் முறையில் இம் மாணவர்களுக்கு அதிகபலன் அளிக்கமுடியாது. பயனுள்ளவகையில் இவை இயங்க வேண்டுமானால் அவற்றிலும் பல மாற்றங்கள் உருவாக்கப்படல் அவசியம்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுடன் தனியார் கல்வி நிலையங்களைப் பற்றி உரையாடும்போது, ஜப்பானில் அவற்றின் நடைமுறை பற்றிக்கூறினார்.

அங்கே தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலைகளுடன் இணைந்து செயற்படுவதாகவும் அவை பாடசாலைகளின் குறை நிரப்பு நிறுவனங்களாக இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் இடையே அங்கு நல்ல உறவுமுறை இருந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இது ஒரு மிகச்சிறந்த முறை எனத் தென்படுகிறது. இன்றைய சூழலில் எமக்கு நன்றாகப் பொருந்தக்கூடிய ஒரு முறை இதுவாகும். நாம் இதனைப் பரீட்சார்த்தமாக வேனும் செயற்படுத்திப்பார்க்கலாம். இப்படியான ஒரு அமைப்பிலே மாணவர்கள் கற்கும் போது கூடியபயனைப் பெறமுடியும்.

மாணவர்களில் ஒரு சாரார் தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் போக வேண்டிய நிலை இருப்பின் அவர்கள் பூரண பயன் பெறுவதற்கு அவற்றை சீரமைப்பது அவசியம்.

தனியார் கல்வி நிலையங்கள் இயங்கும் தற்போதைய நிலையில் அவை அதிகப்பயனை அளிக்க முடியாது. எனவே முதற்படியாக பின்வரும் மாற்றங்களையாவது நடைமுறைப்படுத்தல் அவசியமாகின்றது:-

* பாடசாலை ஆசிரியர்கள் தமது வகுப்பில் கற்கும் மாணவர்களை தனியார் கல்வி நிலைய வகுப்பில் அனுமதியாதிருத்தல், ஆசிரியர் தனது வகுப்பில் பூரண கவனம் எடுத்திருந்தால் - தனது பொறுப்பில் உள்ள மாணவர்கள் பால் தனது கடமையினைச் சரிவரச் செய்திருந்தால் - மாணவன் வேறு ஸ்தாபனங்களுக்கு கற்கச் சென்றிருக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையில்லை. எனவே தமது வகுப்பு மாணவனை தமது தனியார் கல்வி நிலைய வகுப்பில் அனுமதித்தால் அது ஆசிரியரின் தகாத தன்மையினைக் காட்டுகின்றது.

- வகுப்பில் மாணவர் தொகையினைக் குறைத்தல். 30 பேருக்கு மேற்படாத வகுப்புகளே சிறந்தவை. ஆசிரியர் - மாணவர்களுக்கிடையேயான தொடர்பு, நல்ல உறவு முதலியவை கற்றலுக்கு தேவை என்பதனை எந்த நல்லாசிரியரும் அறிவர்.

- தகுதிவாய்ந்த ஆசிரியரை மட்டும் கற்பித்தலுக்கு அமர்த்தல்

- பாடசாலைச் செயற்பாடுகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மாறாகச் செயற்படாதிருத்தல். உதாரணமாக பாடசாலைகளில் நாம் செயல்முறைக் கற்பித்தலை வலியுறுத்துகின்றோம். ஆனால் தனியார் கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள் செய்முறை அவசியமில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்துரைக்கின்றனர்.

- பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின், தனியார் கல்வி நிலையக் கற்பித்தல் நேரத்தைக் கட்டுப்படுத்தல், ஓய்வின்றித் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலை நாட்களில் லீவு எடுக்கின்றனர். பாடசாலை வகுப்பிலும் சிலர் ஓய்வு எடுகின்றனர்.

- தனியார் கல்வி நிறுவனங்களை பாடசாலைகளுடன் இணைத்து அவற்றின்குறை நிரப்பு நிறுவனங்களாக அவற்றைச் செயற்படுத்துதல்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மாணவனுக்கு மேலதிகக்கற்பித்தல் தேவைப்படும் போது தனிப்பட்டமுறையில் ஓர் ஆசிரியரிடம் கற்பிப்பதேசிறந்தது. இது சாத்தியப்படாத வேளையில் ஒரு சில மாணவர்கள் ஒன்று சேர்ந்தால் ஓர் ஆசிரியரிடம் கற்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பறையில் அவர்கள் கற்பிக்காதவை

**குரு:** தன்னம்பிக்கை உள்ளவனாக ஒழிவு மறைவின்றி எடுத்துரைக்கக்கூடிய வனாக பிறரைக்கவரக் கூடியவனாக, பிரச்சினைக்கு முகங்கொடுக்கக்கூடி யவனாக என்றும் திகழ்வாயாக.

**மாணவன்:** நன்றாகச் சொன்னீர்கள், என்னால் இயலுமானால் கடைப்பிடிப்பேன். ஆனால் இப்பண்புகளை எவ்வாறு நான் பெறலாமென நீங்கள் கூறவில் லையே?

எம்மிடம் காணப்படும் சில உள்ளகப் பண்புகளின் பிரதிபலிப்பே மேற்கூறப்பட்ட நடத்தைகளாகும். நாம் இவற்றினை வளர்த்துக் கொள்ளமுடியும்.

மகாத்மா காந்தியினை நாம் எல்லோரும் அறிவோம். கோடிக்கணக்கான மக்களைத் தன்பால் கவர்ந்து இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றவர். தனது எண்ணங்களாலும், செயலாலும், லட்சியத்தாலும், உறுதியாலும், சத்திய நெறிகளாலும், தியாகத்தாலும் தன்னை நாடளாவிய ரீதியில் உயர்த்திக் கொண்டவர் மகாத்மாகாந்தி ஆவார்.

மகாத்மா காந்தியின் இளவயது அனுபவம் பற்றி ஓர் நூலாசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்:-'மோகனதாஸ்காந்தி என்ற இளைஞன் வழக்கறிஞராக வாழ்வைத் தொடங்கினார். முதல் வழக்கின் போது வாதிட எழுந்தார் காந்தி. கண்கள் இருண்டன. காதுகள் பஞ்சடைத்தன. நாத்தழுதழுத்தது. அழாத குறையாக அவர் அமர்ந்தார். பிற வழக்கறிஞர்களும் நீதிபதியும் புன்னகைத்திருக்கக்கூடும். ஆனால் காந்தி அதனை உணரும் நிலையில் இல்லை. அத்தகைய மனிதர் இந்தியாவின் விடுதலைக் கோரிக்கையை எடுத்துக்கொண்டு இங்கிலாந்தின் நாடாளு மன்றத்திலே பின்னால் விவாதித்தார். எத்தகைய மாற்றம் பாருங்கள்''

பயத்தால் பீடிக்கப்பட்டிருந்தவர் தன்னம்பிக்கை மூலம் அதில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். எதனைக் கண்டு பயப்படுகிறீர்களோ அதில் சிறிது சிறிதாக நீங்கள் ஈடுபட்டு வரும் பொழுது உங்கள் தன்னம்பிக்கை படிப்படியாக வளரும். தன்னம்பிக்கை உருவாகும் பொழுது பயம் தானாகவே விலகிவிடும்.

தாழ்வு மனப்பான்மையும் தன்னம்பிக்கையைப் பாதித்து விடும், உலகில் உங்களிலும் பார்க்க திறமை, அறிவு ஆற்றல், வலிமை ஆகியவற்றில் சிறந்தார் பலர் இருப்பர். அவர்களுடன் உங்களை ஒப்பிட்டு மனம்புழுங்கி நீங்கள் ஒதுங்கினால் அது உங்களையே அழிப்பதாக முடியும். உங்களில் எத்தனையோ பேர் சபையில் கடைசி வாங்கில் அமர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்



விட்டு சந்தடியில்லாமல் எழுந்து வருவதில்லையா? உங்களை யாருமே கண்டு கொள்ளப் போவதேயில்லை.

நாம் விரும்பாதவற்றைக்கூடப்பிறர் கூறும் பொழுது பொறுமையாகக் கேட்கக்கற்றுக் கொள்ளுங்கள். அரசியல் தலைவர்கள் பலர் விமர்சனங்களைக் கேட்டுப் பொறுக்காமல் பத்திரிகை தணிக்கையை அமுல்படுத்தி பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்துள்ளனர். அதன் விளைவாக நாட்டு நடப்பு எதுவும் தெரிய அவர்களுக்கு வாய்ப்பில்லை. இந்நிலை அவர்களை அழிவுக்கே இட்டுச் சென்றுள்ளது.

கட்டிளமைப் பருவத்தினர் சகபாடிகளுடன் உறவாடுவதை மிகவும் விரும்புவர். இக்காலப் பருவத்தில் அவர்கள் நல்ல வழி காட்டலுடன் அமைந்த அமைப்புக்களில் இணைவதன் மூலம் தங்கள் சக்திகளை, புலன்களைப் பயனுள்ள முறையில் நெறிப்படுத்த முடியும். சாரணியம், விளையாட்டுக் கழகங்கள், சேவைக்கழகங்கள் போன்றவற்றில் ஈடுபடுவதால் பல தேவையான, விரும்பத்தக்க சீரிய பண்புகளை வளர்த்துக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகும். ஒழுக்கக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி, கடமை உணர்ச்சி, தலைமைத்தவப் பண்புக்கூறுகள் போன்ற இன்னோரன்ன பண்புகளை கற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் பல ஏற்படுகின்றன. விளையாட்டு மைதானங்கள், சதுரங்கம் மற்றும் உள்ளக விளையாட்டுக்கள், கழக நிர்வாகங்கள் போன்றவற்றில் சடுதியான தீர்மானங்கள் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல; எதிர்த்தரப்பின் நகர்விற்கு ஏற்ப திட்டமிட்டு செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏராளம்; அணியாகத் தொழிற்படவேண்டிய தேவை; தோல்விகளைக் கண்டு தொய்வடையாது மனம்சலிக்காது தொடர்ந்தும் செயற்படும் மனப்பாங்கு. இவைபோன்ற பண்புகள் பலவற்றை எம்மை அறியாமலேயே கற்றுக் கொள்கின்றோம். வருங் காலத்திற்கான நல்வாழ்வின் பயிற்சிக் களங்களாக இவை அமைகின்றன. ஒரு பெரிய நாடொன்றின் முன்னாள் பிரதமர் சிற்றுண்டி வேளையில் தேநீரா அல்லது காப்பியா எடுப்பதென்று தீர்மானிக்க பல நிமிடங்கள் எடுக்குமாம். இவ்வாறு தீர்மானம் எடுக்கத்தத்தளிக்கும் இவர் பிற்பாடு ஒரு இராணுவ தலையீட்டின் மூலம் அவமானப்பட்டது ஆச்சரியமான விடயமல்ல.

எமது பேச்சிலும் செயலிலும் உண்மை, விசுவாசம் பொதிந்திருத்தல் வேண்டும். கபடம் இருப்பின் அது எம்மைச் சங்கடமான நிலைமைக்கு இட்டுச் சென்றுவிடும். நிக்சன் என்ற முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியினை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர் ஜனாதிபதியாக வருவதற்குப் பல வருடங்களுக்கு முன் நடந்த சம்பவமொன்றினை ஒரு நூலாசிரியர் தனது நூலில் கூறுகின்றார். இந்நூலாசிரியரும் அவரது நண்பர் ஒருவரும் ஒரு விடுதியில் உணவருந்திக் கொண்டிருக்கும் பொழுது நிக்சனும் அவ்விடுதிக்கு வருகை தந்திருந்தார். நூலாசிரியரின் நண்பரைக் கண்டதும் வந்து அவருடன் பேசினார். இதன் பின் சில தினங்களில் நூலாசிரியரும் வேறொரு நண்பரும் ஒன்றாக இருக்கும் வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிக்சன் தற்செயலாக அங்கு வரநேர்ந்தது. இந்த நண்பரைக் கண்டதும் நிக்சன் அவரிடமும் வந்து பேசினார்.

இங்கே கவனிக்க வேண்டியது யாதெனில், இரு சந்தர்ப்பங்களிலும் நிக்சன் மகிழ்ச்சி பொங்கப் பேசினார். ஆனால் இரு வேளைகளிலும் அவர் ஒரே வார்த்தைகளையும் ஒரே வகையான ஆறு ஏழு வசனங்களையுமே உபயோகித்தார் என்பதாகும். இங்கு குறிப்பிட்ட நூலாசிரியரின் நண்பர்கள் இருவரும் விளையாட்டுத்துறையினைச் சார்ந்தவர்கள். இதனைப் பார்க்கும் பொழுது நிக்சன் அவர்கள் ஒவ்வொரு துறையினருக்குமெனச் சில வசனங்களைக் கையிருப்பில் வைத்துள்ளார்போல் தெரிகின்றது. இச்செயற்பாடு அவர் உயிருள்ள மனிதனுடன் பேசாது மரக்கட்டை ஒன்றுடன் பேசுமாறுபோல் அமைகின்றது.

இந்நிகழ்வுக்குப் பத்து வருடங்களின் பின் நிக்சன் அவர்கள் வாட்டக் கேற் ஊழலில் சம்பந்தப்பட்டு அவமானடைந்து ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியது அவரின் போலி நடத்தையின் விளைவேயாகும்.

நீங்கள் ஒரு லட்சியத்தைக் குறிக்கோளாக வைத்துச் செயற்படுவீர்களேயானால், அதில் முழுமனதுடன் திடசங்கற்பத்துடன் ஈடுபடுவீர்களேயானால், அந்த லட்சியம் எனும் மகத்தான சக்தி சாதிக்க முடியாதவற்றையெல்லாம் சாதிக்கும். தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தனது சுய் சரிதை நூலில் கூறுகின்றார். தனது மக்கள் தங்கள் வாழ்க்கையைக் கௌரவமாகவும் சுயமரியாதையுடனும் வாழ வகைசெய்ய வேண்டு மென்ற தனது லட்சியம் தன்னுள் ஒரு புத்துணர்ச்சியையும் பயந்தசுபாவமுள்ள அவரை எதற்கும் துணிந்தவராகவும் சட்டதிட்டங்களுக்குக் கீழ் படிந்து நடந்த ஒரு சட்டத்தரணி யான அவரைச் சட்டத்தை மதியாதவராகவும் மாற்றியதாகக் கூறுகின்றார்.

பிற்கால வாழ்க்கையில் நீங்கள் அடையும் வெற்றி, தோல்வி, முன்னேற்றம் - பின்னடைவு, கௌரவம் அவமானம் ஆகிய யாவும் உங்களுக்கு இளவயதில் கிடைக் கின்ற, களத்தில் நீங்கள் பெறும் பயிற்சியின் பெறுபேறுகளே ஆகும். எனவே உங்கள் இளவயதில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலை அதிபர்கள் : ஒரு சிந்தனை**

அதிபரே பாடசாலையைப் பிரதிபலிப்பதாகப் பலரும் கருதுவர். அவரும், அவரது தொழிலும் சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பன. அவர் எமது இளைஞரின் வருங்கால வாழ்க்கையை உருவாக்குவதில் அதிக பங்குடையவர். ஆகவே, அதிபர் ஒருவர் அவருக்குத் தெரிந்தோ தெரியாமலோ அவரது ஆசிரியர்கள், மாணவர்கள், சமூகத்தினர் ஆகியோரால் தினமும் மதிப்பீடு செய்யப்படுகின்றார்; விமர்சிக்கப்படுகின்றார்.

ஏனைய முகாமைத்துவங்களைப் போலன்றி பாடசாலை முகாமைத்துவத்தில் அதிபர் ஒருவர் வளர்ந்து வரும் மனிதப் பிறவிகளுடன் அதிக நேரம் பழகுகின்றார். அவர்கள் பலதரப்பட்ட சூழல்களிலிருந்து வேறுபட்ட குடும்பப் பின்னணியினைக் கொண்டவர்களாக வருகின்றார்கள். எனவே அவர்களை வழி நடத்த விசேட ஆற்றல் தேவை.

ஒரு சிறந்த தலைவனாலேயே பிறரை நல்வழியில் எடுத்துச்செல்ல முடியும். எனவே அதிபர் ஒரு ஆற்றல் மிகு தலைவனாகச் செயற்பட வேண்டும். தலைவன் ஒருவன் பிறர் மீது தனது செல்வாக்கினைச் செலுத்தக் கூடியவனாக இருத்தல் அவசியம். அதற்கு அவனுக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். எனவே ஒரு அதிபர் தனது அதிகாரங்களையும் செல்வாக்கினையும் வளர்த்தல் இன்றியமையாதது.

இந்த அதிகாரத்தினை அல்லது செல்வாக்கினை அதிபர் பெறக்கூடிய சிலவழி முறைகளைக் கவனிப்போம்.

ஓர் அதிபர் நிர்ப்பந்தித்தல் மூலம் அதிகாரத்தைச் செலுத்தலாம். பிறர் மீது சீறிப்பாய்தல், பயமுறுத்தல் தண்டனை வழங்குதல், மனதில் பீதியை உருவாக்கல் போன்ற யுக்திகளைக் கையாளல் மூலம் பிறர் மீது செல்வாக்கினை/அதிகாரத்தினைச் செலுத்த முற்படலாம். இவ்வழியினைப் பின்பற்றல் நீண்ட காலப்பலனைத் தரமாட்டாது. குறுகிய காலத்திற்குப் பலனளிக்கலாம். எனவே இவ்வழியினைத்தவிர்த்தல் நன்று. தமது பதவி வழியாலும் அதிபர் ஒருவர் அதிகாரத்தினை பெறுகின்றார். இது அவர் வகிக்கும் பதவிக்குரிய அதிகாரம். இது அவருக்கு அவரிலும் மேல் நிலையிலுள்ளோரால் வழங்கப்பட்டது. ஆனால் அதிபர் எதிர்கொள்ள வேண்டிய சவால்களுக்கு ஏற்ற அளவில் இவ்வதிகாரங்கள் அமையவில்லை என்பது சுட்டிக்காட்டப்படத்தக்கது.

நிபுணத்துவ அதிகாரம் மூலமும் அதிபர் செல்வாக்கினைச் செலுத்தலாம். பிறரிடமில்லாத சிறப்பான அறிவு ஒருவரிடமிருந்து, அவ்வறிவு பிறருக்குத் தேவைப்படின் அந்த அறிவுக்குக் கொடுக்கப்படும் மதிப்பின் காரணமாகவும் அதன் தேவையின் காரணமாகவும் அவருக்குப் பிறர் கட்டுப்பட்டுச் செயற்படுவர். எனவே ஓர் அதிபர் தமது செல்வாக்கினைப் பெருக்கவிரும்பின் தமது அறிவினையும் ஆற்றலையும் திறமையையும் பெருக்கிக் கொள்ள வேண்டும். அவர் எந்த அளவிற்கு அவற்றினைப் பெருக்கிக்கொள்கின்றாரோ அந்த அளவிற்கு அவரின் செல்வாக்கும் பெருகுமென்பது கண்கூடு.

நிதிபோன்ற வெகுமதிகளையோ, பதவி உயர்வுகளையோ கௌரவித்தல், கணித்தல் ஆகியவற்றையோ வழங்கவல்ல நிலையிலுள்ள ஒருவர் அதன் மூலம் மற்றவர்களின் மேல் அதிகாரத்தினையும் செல்வாக்கினையும் செலுத்த முடியும். இதனை வெகுமதி வழங்கும் அதிகாரமென அழைக்கலாம்.

செல்வாக்கினைச் செலுத்தத் துணைசெலுல்லுகின்ற மேலும் ஓர் அம்சம் தொடர்பி



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் உருவாகின்றது. இதனைப் பின்னல் உறவுகளினால் பெறும் அதிகாரமென்பர். பாடசாலையின் அதிபர் தமது ஆசிரியர்கள் மாணவர்கள், மற்றும் ஊழியர்கள், கல்வி நிர்வாகச் செயலகங்கள், பாடசாலைச் சமூகம் ஆகியவற்றுடன் நல்ல உறவுகளை, தொடர்புகளை, புரிந்துணர்வை ஏற்படுத்துவதனால் அவர்தம் செல்வாக்கினைப் பெருக்கலாம். இவ்வம்சம் மிகக்குறைவாகவே விருத்தி செய்யப்பட்டிருந்தால் இதில் அதிபர்கள் கூடிய கவனம் செலுத்தித் தங்கள் செல்வாக்கினை விருத்தி செய்யலாம். இவ்வழி அதிபர்களுக்கு மிகவும் பொருத்தப்பாடுடையதும் அவர்களால் விருத்தி செய்யப்பட அதிக வாய்ப்பானதுமாகும்.

இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்பிருந்த அதிபர்கள் சமூகத்தில் ஒரு மதிப்பினையும் மரியாதையையும் பெற்றிருந்தனர். இதற்கு அவர்கள் இப் பின்னால் தொடர்புகளை விருத்தி செய்தமையே முக்கிய காரணமாகும். இதற்கு வசதியாக அதிபர்கள் பாடசாலைக்குப் பாடசாலை மாற்றப்படாமல் ஒரேயிடத்திலிருந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எமது சமூகத்திலே ஆசிரியர், அதிபர் ஆகியோருக்கு மரியாதை செலுத்துவது ஒரு பாரம்பரியம். இதனையும் அதிபர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம்.

எவரும் அதிபராக இருக்கலாமென்று இல்லாமல் அத்தொழிலுக்கேற்ப மனப்பாங்கும், பயிற்சியும், அறிவும், தகைமைகளும் உள்ளவர்களே அதில் திறம்படச் செயலாற்றமுடியும். என்ற உண்மை நிலை உணரப்படவேண்டியது அவசியமாகும்.

நல்ல கல்வி அறிவு, நல்ல கல்வித்தகைமைகள் இருந்தால் மட்டும் ஒருவர் சிறந்த அதிபராகச் செயற்படலாமென்ற தப்பான மனப்பாங்கு இந்த மாற்றமடையும் உலகில் இன்றும் பலரிடம் நிலவுகின்றது. அதிபர் தெரிவில் இப்போது பின்பற்றப்படும் வழிமுறை இதனையே பிரதிபலிக்கின்றது. இதனால் சிரேஷ்ட ஆசிரியர்கள் மத்தியில் மனவிரக்தி ஏற்பட்டுள்ளமை கண்கூடு. யாரும் அதிபராக இருக்கலாமென்று இல்லாமல் அத்தொழிலுக்கேற்ற மனப்பாங்கும் பயிற்சியும் அறிவும் தகைமைகளும் உள்ளவர்களே அதிபர்களாகத் திறம்படச் செயலாற்ற முடியும் என்ற உண்மை நிலை உணரப்படவேண்டியது அவசியமாகும். இந்த வகையில் அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்கமுன் அதிபர் நியமனத்தில் இருந்த நடைமுறையும் தற்பொழுதும் தனியார் பாடசாலைகளில் அதிபர் தெரிவிற் கையாளப்படும் முறையும் கவனத்திற் கொள்ளக்கூடியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு: ஆவணி, புரட்டாதி, ஐப்பசி 1994

## பாடசாலை நிர்வாகத்தில் பணிவும் துணிவும்

கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபராக 1980 ஆம் ஆண்டு தை மாதம் நான் கடமையேற்றேன். கடமை ஏற்று ஆறுமாதங்கள் கூட நிறைவு பெறாத நிலையில் நடந்த ஒரு நிகழ்வு இன்றும் எனது மனதில் ஆழப்பதிந்துள்ளது. எனக்குச் சரியான மனத்தெம்பு ஏற்படாதகாலம். மேலும் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து, முன்னைய அரசாங்க உத்தியோகத்தர்கள் புதிய அரசாங்கங்கத்திற்கு விசுவாசமாக நடப்பார்களா என்ற சந்தேகக்கண்ணுடன் நோக்கிய காலம். இந்தப்பின்னணியில் நடந்த இந்த நிகழ்வு கொடுத்த அனுபவம் பிற அதிபர்களுக்கும் உதவியாக அமையும் என நம்புகின்றேன்.

1979 ஆம் ஆண்டில் பரியோவான் கல்லூரியில் நிருபன் என்ற மாணவன் க.பொ.த.(உ/த) வகுப்பில் வர்த்தகப் பிரிவு முதலாம் வருடத்தில் (ஆண்டு12) கல்வி கற்றுக்கொண்டிருந்தான். பாடசாலையில் கற்றுக்கொண்டு இருக்கையில் மாணவர் தனிப்பட்ட பரீட்சாத்தியாக க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்ற முடியாதென்பது பிரமாணம். இப்பிரமாணத்தைப் பரியோவான் கல்லூரி மிகக் கண்டிப்பாகச் செயற்படுத்தியது. அப்படியிருந்தும் இம்மாணவன் தனிப்பட்ட பரீட்சாத்தியாக 1980 டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றி க.பொ.த.(உ/த) விஞ்ஞானப் பிரிவில் கற்பதற்கு வேண்டிய பெறுபேற்றினைப் பெற்றுள்ளான். 1980 மே மாதத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்ததும் நிருபன் என்ற இம் மாணவன் எனது கல்லூரியில் க.பொ.த விஞ்ஞான பிரிவிற்கு அனுமதிவேண்டி எனது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் ஒருவருடன் என்னிடம் வந்தான்.

தனிப்பட்ட பரீட்சாத்திகளாகத் தோற்றியோரை எனது கல்லூரியில் நாம் அனுமதிப்பதில்லை. அதன் பிரகாரம் நான் இடமில்லையென்று கூறியதும் அவர்கள் வெளியேபோக ஆயத்தப்படுத்தினார்கள். அப்பொழுது அந்த மாணவன் என்னிடம் வந்து, தான் எனது கல்லூரியில் அனுமதி கேட்டதையும் தனிப்பட்ட பரீட்சாத்தியாகத் தோற்றிய விடயத்தையும் பரியோவான் கல்லூரிக்குத் தெரியப்படுத்தவேண்டாம் என்று ஒர வேண்டுகோள் விடுத்தான். அப்படியே நானும் உறுதியளித்தேன். இத்துடன் இந்த விடயம் முற்றுபுள்ளி பெற்றதாக நான் நினைத்தேன்.

ஆனால் 25.06.80 திகதியிடப்பட்ட கடிதம் ஒன்று கல்விப்பணிப்பாளரிடமிருந்து எனக்குக்கிடைத்தது. அதில் குறிப்பிட்டிருந்தார். ''உயர்கல்வி பிரதி அமைச்சர், நிருபன் என்ற மாணவனை உங்கள் கல்லூரியில் அனுமதிக்கும் படி என்னை வேண்டுகின்றார். எனவே இவரை க.பொ.த (உ/த) விஞ்ஞானப்பிரிவிற்கு தகுதி உடையவராயின் அனுமதித்து எனக்கு அறியத்தரவும்''

இப்படி ஒரு கடிதம் கிடைத்ததும் சிறிது கோபமடைந்தேன். இப்படி ஒரு மாணவன் தவறான வழியில் ஓர் அதிபரை ஆட்டிப்படைக்க இடங்கொடுக்கக்கூடாது என என் மனம் கூறியது. மேலும் அம்மாணவன் கற்றபாடசாலையிலே விஞ்ஞானப் பிரிவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கப்படாதபொழுது எனது பாடசாலையில் நிர்ப்பந்தத்தின் பொருட்டு அவனை அனுமதித்தால் எனது மாணவர்கள் என்னைப்பற்றி எவ்வாறு சிந்திப்பர்? எனது பாடசாலை இரண்டாந்தரப் பாடசாலையாகக் கணிக்கப்பட்டு விடாதா? அந்நிலையில் அங்குகற்கும் மாணவர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்படாதா? இவ்வாறு எல்லாம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து 30.06.80 இல் கல்விப் பணிப்பாளருக்குப் பதில் எழுதினேன்.

''பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

01. விண்ணப்பதாரி தற்பொழுது பரியோவான் கல்லூரியில் தரம் 12 (ஆண்டு 13) இல் வர்த்தகப்பிரிவில் கல்விகற்கின்றார் (இறுதிப்பரீட்சை ஆகஸ்ட் 1981)

02. விண்ணப்பதாரி பாடசாலையில் கற்கும் பொழுது தனிப்பட்ட பரீட்சாத்தியாக க.பொ.த (சா/த) டிச 1979 பரீட்சைக்குத்தோற்றி விஞ்ஞானப் பிரிவுக்குத் தகுதிபெறக்கூடிய பெறுபேறுகளைப் பெற்றுள்ளார். தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்றியது அமைச்சின் பிரமாணங்களுக்கு முரணானதாகும்.

மேற்படி தகவல்களைப் பரிசீலித்து மேலும் நான் இவ்விண்ணப்பதாரியை அனுமதிப்பதா என்பதனை அறியத்தரவும். இவ்வாறு பதில் அனுப்பியிருந்தேன். நான் இறுதியாக ''தகுதியின்மையால் அனுமதிக்க முடியாமைக்கு வருந்துகிறேன்'' என எழுதியிருக்கலாம். ஆனால் என் அனுபவமின்மை காரணமாக அப்படி எழுதாமல் விட்டு விட்டேன்.

சிலர் மேலிடத்தில் நல்ல பெயர் எடுப்பதற்காக கீழே உள்ளவர்களின் மனோநிலையை மதிப்பதில்லை. எனது பதிலைக்கண்டதும் கல்விப்பணிப்பாளர் தொலைபேசி மூலம் நெருக்கத்தொடங்கிவிட்டார். சில சந்தர்ப்பங்களில் அதிர்ஷ்டமோ ஆண்டவனோ கை கொடுத்து உதவுவதுண்டு. அவ்வாறே இக்கல்விப்பணிப்பாளர் சடுதியாக யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றலாகிச்சென்று விட்டார்.

திரு.எஸ். சிவநாதன் அவர்கள் கல்விப்பணிப்பாளராகப் பொறுப்பேற்றார். ஆனால் இப்புதிய பணிப்பாளர் எப்படிப்பட்டவர். எப்படிப்பட்ட பிரச்சினையைக்கிளப்பப்போகிறார் என மனம் பதைபதைத்தது. நான் சரியான நிலையில் நின்றபோதும் மனம்பக்குவப்படாமையினால் என்னால் இப்பிரச்சினையை எதிர் கொள்ளக்கஷ்டமாக இருந்தது. பொறுத்திருந்து பார்ப்போமென இருந்த வேளையில் பதிவுத்தபால் ஒன்று கடுகதியாக என்கைக்கு வந்தது. நெஞ்சு படபடத்தது.

உயர் கல்விப் பிரதி அமைச்சரினால் எனக்கு நேராக எழுதப்பட்ட கடிதம் தான் அது. அதில் பிரதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

''நிரூபன் என்ற மாணவனை உமது பாடசாலையில் சேர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவும், எனது வேண்டுகோளின்படிதான் பிரதேசக்கல்விப்பணிப்பாளர் இம்மாணவனை உமது கல்லூரியில் அனுமதிக்கும்படி வேண்டியுள்ளார். மாணவனைச் சேர்த்துவிட்டு எனக்கு அறியத்தரவும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கடிதம் கிடைத்ததும் நான் ஒரு சில நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்தேன், அவர்கள் பணித்தவேண்டுகோளை நிறைவேற்றும்படி கூறினார்கள். ஒரு பாடசாலை அதிபர் கடமையாற்ற வேண்டிய சூழல் அவர்களுக்கு விளங்கவில்லை என நான் நினைத்துக் கொண்டேன். ஓர் அதிபர், சமூகத்தால் மதிக்கப்படக்கூடியவராக தன்னைவளர்த்துக் கொள்ளவேண்டும். சமூகத்தின் ஆதரவைப் பெறக்கூடியவராக இருத்தல் வேண்டும். சரியென்றுபட்டதற்குச் சார்பாகக் குரல் கொடுக்க வேண்டும். இந்த மாணவனுக்கு யாரோ ஒருவர் மூலம் அரசாங்க அமைச்சர் ஒருவர் மீது செல்வாக்குப் பிரயோகிக்கக்கூடியதாக இருப்பதால் ஒரு பாடசாலையின் அதிபர் பணிந்து கொடுக்க வேண்டுமா? பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் சமூகம் என்ன நினைப்பர்? இத்தகைய சிந்தனையுடன் சில நாட்களைக் கழித்தேன். என்றாலும் மனம் அமைதியற்றிருந்தது.

புதிய கல்விப்பணிப்பாளரைச் சந்தித்து அவர் என்ன கூறுகின்றார் என அறிவோமெனச் சென்றேன். நடந்தவற்றை அவருக்குவிளக்கி நான் முந்திய கல்விப்பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்தின் பிரதியையும் அமைச்சரின் கடிதத்தையும் காட்டினேன். திரு.எஸ். சிவநாதன் அவர்கள் சிந்தித்துவிட்டுக் கூறினார்... ''அந்த மாணவனைக் சேர்க்க வேண்டாம்'' எனக்கோ உள்ளம் குளிர்ந்தது. அதிபரின் நிலையை உணர்ந்த ஒரேயொரு கல்விப்பணிப்பாளர் அவர் என நினைத்துக்கொண்டேன். அந்த அளவில் அவர் நிற்க வில்லை. ஒரு கடிதமும் எனக்கு விலாசமிட்டுத்தந்தார். அதில் கூறியிருந்தார்....''உங்கள் 30.06.80 கடிதம் சம்பந்தமாக, நிரூபன் தரம் 11 (ஆண்டு12) இல் அனுமதிப்பதற்குத் தகுதியற்றவர் என அறியக் கூடியதாக உள்ளது. நீங்கள் தரம் 11ல் வெற்றிடங்கள் இல்லை என்றும் கூறியுள்ளீர்கள். எனவே அவனை அனுமதிக்கவேண்டாம்''.

இக்கடிதத்தை வாசித்ததும் நன்றிப்பெருக்கால் என்னுள்ளம் கசிந்தது. வகுப்பில் வெற்றிடங்கள் இல்லை என்ற கூற்றினை நான் கூறாதபோதும் அக்கடிதத்தில் அவர் அதைச் சேர்த்தமை அவர் எவ்வளவு தூரம் ஓர் அதிபரைக் காப்பாற்ற முன்வந்துள்ளார் என்பதைத் துலாம்பரமாக்கியது. முன்னைய கல்விப் பணிப்பாளருக்கு எவ்வாறு பதில் எழுதியிருந்தேனோ அதேபோல் பிரதி அமைச்சருக்கும் எழுதும்படியும் அவர் ஆலோசனை கூறினார். மேலும் பதிலில் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமான அமைச்சின் சுற்று நிருபங்களைத் தேடிப் பார்க்கும்படியும் கூறினார். நானும் கல்விப்பணிப்பாளருக்கு எழுதிய பதில் போலவே பிரதி அமைச்சருக்கம் 23.07.80 இல் பதில் அனுப்பியிருந்தேன். ஆனால் மேலதிகமாக பின்வருவனவற்றைக் குறித்திருந்தேன்;

01. ''கல்விப்பணிப்பாளர் 27.07.80 திகதியிடப்பட்ட கடித மூலம் இம் மாணவன் தரம் 11 இல் சேர்ப்பதற்கு தகுதி அற்றவன் எனக் கூறியுள்ளார்.

02. தரம் 11(ஆண்டு12) இல் வெற்றிடங்கள் இல்லை. இத்துடன் பிரச்சினை முடிந்ததாக ஆறுதலடைந்தேன். ஆனால் 03.08.80 இல் மீண்டும் ஒரு திகிலூட்டும் கடுகதிக்கடிதம் அதனை அப்படியே தருகின்றேன்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்,
கொக்குவில் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

03.08.80

பொ.நிருபன் தரம் 11 அனுமதி

''நானும், உயர் கல்விப் பிரதி அமைச்சரும் மேற்கூறப்பட்ட மாணவனை உமது பாடசாலையில் அனுமதிக்கும்படி கேட்டிருந்தோம்.

இந்த மாணவன் தனிப்பட்ட பரீட்சாத்தியாகத் தோற்றி க.பொ.த. பரீட்சையில் சித்தியடைந்தான் என்பதை நாம் நன்றாக அறிவோம். அவருக்கு க.பொ.த (உ/த) வகுப்பில் சேர்வதற்குக் போதிய பாடங்களும், அதில் திறமைச் சித்திகளும் வயதும் உண்டு. அவர்கொக்குவில் கிராமத்தையும் சேர்நதவர்.

இந்த மாணவனின் முன்னேற்றத்திக்குக் குறுக்கே நீர் எதற்காக நிற்கின்றீர் என்பதனை என்னால் விளங்க முடியவில்லை.

நாம் இம் மாணவனினுடைய பிரச்சினையை நன்றாக அலசிப்பார்த்துள்ளோம். உயர் கல்விப்பிரதி அமைச்சர் இம்மாணவனை அனுமதிக்கும்படி பணித்துள்ளார்.

இந்த விடயத்தில் நீர் பணிக்கப்பட்டபடி செயற்படாவிட்டால், நீர் எமது அரசாங்கத்தையும் கட்சியையும் இக்கட்டான நிலைக்கு உட்படுத்துவதாகக் கருதி, இவ்விடயத்தை மந்திரிசபையில் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்குவீர்.

இம்மாணவனை அனுமதித்து, இதுசம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தீர் என்பதனை உடன் அறியத்தரவும்''....இவ்வாறு மீன்பிடித்துறைப் பிரதி அமைச்சரினால் எழுதப்பட்டிருந்தது.

இக்கடிதம் கிடைத்தும் சில நாள்கள் மனம் ஒரு நிலையில் இல்லை. கொள்கையை விட்டுப் பணிந்து சென்றாலென்ன என்று ஒரு கணம் எண்ணுவதுண்டு. மறுகணம் அது தவறு என்று நினைப்பதுண்டு. சில நண்பர்களுக்கு இப்பிரச்சினை தெரியும். ஏதாவது வழி கண்டு பிடிக்கமுடியுமா என முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். என் உள்மனமோ எனது பாடசாலையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமெனக் கூறிக்கொண்டிருந்தது. இது எனது தனிப்பட்ட பிரச்சினையல்ல. அதிபரின் பிரச்சினை. இவ்வாறெல்லாம் சிந்தித்தபடியே கல்விப்பணிப்பாளரைச் சந்திக்கச்சென்றேன். அவர் மீன்பிடித்துறை பிரதி அமைச்சரின் கடிதத்தினைப் பார்த்தார். எவ்வித உணர்ச்சியுமின்றி, முன்பு எழுதிய காரணங்களையே இக்கடிதத்திற்கும் பதிலாக எழுதும்படி ஆலோசனை கூறினார். அதுதான் சரியான நிலைப்பாடென நானும் நினைத்தேன். அவர் அந்நேரத்தில் தனக்கு எதற்கு இப்பிரச்சினை என்று இருந்துவிடாமல் எனக்குப் பக்கபலமாக இருந்ததனை என்னால் என்றும் மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளரின் ஆலோசனைப்படி நான் எழுதினேன்.....''...இவ் விண்ணப்பதாரி நிருபன் தரம் 11- விஞ்ஞானப் பிரிவில் அனுமதி பெறுவதற்குத் தகுதி இல்லாதவர் என்பதனை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். இக்கூற்றினை பிரதேசக் கல்விப்பணிப்பாளரும் உறுதி செய்துள்ளார். அவரின் இக்கூற்றினையும் மீறி நான் அனுமதி வழங்குவதில் உள்ள பிரச்சினைகளை நீங்கள் உணர்வீர்களென நம்புகின்றேன்.

குறிப்பிட்ட மாணவனின் வளர்ச்சிக்கும் குறுக்கே எவ்வகையிலும் நிற்கும் எண்ணம் எனக்கு இல்லை என்பதனையும் அறியத்தரவிரும்புகின்றேன். தகுதியில்லா ஒரு மாணவனுக்கு அனுமதி வழங்க முடியாமையினை அரசாங்கத்திற்கு விசுவாசமற்ற செயலென நீங்கள் குறிப்பிட்டது மிகவும் வேதனையைத் தருகின்றது....''

இவ்வாறு நான் இக்கடிதத்தினை முடித்து அனுப்புவதற்கு ஆயத்தப்படுத்தி வைத்திருந்தவேளை எனது நண்பர் ஒருவர் ஒரு நற்செய்தியுடன் வந்தார். எனது நண்பர் தனது கடமை காரணமாக யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள மகா வித்தியாலயத்திற்குச் சென்ற வேளை அங்கும் எனது பிரச்சினை போன்ற ஒன்று இடம் பெற்றதாகவும் அப்பொழுது அப்பாடசாலையின் அதிபர் பிரதிக்கல்விப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதி அவருடைய பணிப்பைப் பெற்றுள்ளாரென்றும் அதன் பிரதி ஒன்றினையும் என்னிடம் தந்தார். நான் தயாராக வைத்திருந்த பதில் கடிதத்துடன் இப்பிரதியினையும் இணைத்து. பதில் கடிதத்தில் ஒரு பிற்குறிப்பும் எழுதியிருந்தேன்.

அந்தப்பிற்குறிப்பு.....'' எனது நிலைப்பாட்டிற்குச் சான்றாகப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் நாயகத்தினால் சிங்கள மாகாவித்தியாலய அதிபருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் இருந்து உரிய பகுதியை இங்கு தருகின்றேன்.''

''......1979 இல் தரம் 11 இல் உள்ள மாணவர்களை 1980 இல் தரம் 11 க்கு அனுமதிக்கக்கூடாது. 1979 இல் தரம் 11 இல் உள்ள மாணவர்கள் 1981 இல் தமது க.பொ.த (உ/த) பரீட்சைக்கு முதல் முறையாகத் தோற்ற வேண்டும். எனவே ஒருவர் ஒரு துறையிலிருந்து பிறிதொருதுறைக்கு ஒரு வருடம் முடிந்தபின் மாறமுடியாது''

இக்கடிதத்தின் பின் இப்பிரச்சினை முற்றுப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு: மாசி 1995

## ஒதுங்குபவர்களை ஒதுக்காதீர்கள்

சந்திரன்: நான் என்பாட்டில் ஒதுங்கியே வாழ்பவன். பிறருடன்சேர விரும்ப மாட்டேன். எச்செயற்பாட்டிலும் ஈடுபடக்கூச்சப்படுவேன். யாராவது என்னுடன் கதைத்தால் மட்டும் பதில் கூறுவேன். வகுப்பில் ஆசிரியர் என்னை ஏதாவது கேள்வி கேட்டாலுமென்ற பயத்தில் நான் முன்னால் உள்ள மாணவர்களின் பின்னால் மறைந்துகொள்வேன். விடைதெரிந்தாலும் எழுந்து நின்று என்னால் கதைக்க முடியாது; கூச்சமாக இருக்கும். என்னைச் சகமாணவர்கள் எல்லோரும் கவனிப்பதாக ஒரு மனப்பயம். என்னில் ஒரு குறைபாடு உள்ளதாக என்மனம் நினைத்துத்துன்பப்படும் ''பகற்கனவு'' என்று கூறுவாரே, அந்தக்கற்பனை உலகிற்கு நான் அடிக்கடி சென்றுவிடுவேன்.

தாய்: என்மகன் சந்திரன் அவனது அண்ணன் மோகனைப் போலல்ல. பாடசாலையிலிருந்து வீட்டிற்குவந்தால் மோகன் தன் நண்பர்களுடன் விளையாடுவதற்குச் சென்றுவிடுவான்; சண்டையிடுவான்; ஆனால் புத்தகத்தைத்திறந்தே பார்க்கமாட்டான். சந்திரனால் என்றுமே பிரச்சினையில்லை. பாடசாலை முடிந்ததும் வீட்டிற்குவந்து ஒரு புத்தகத்தையோ அல்லது சஞ்சிகையையோ கையில் எடுத்துக்கொண்டு ஒரு மூலையில் ஒதுங்கிவிடுவான். அநாவசியமாக அலட்டமாட்டான். வீட்டில் நல்ல சித்திரங்கள் வரைவான்.

ஆசிரியர்: சந்திரன் ஆண்டு 9 இல் கற்கின்றான். நான் அவனுடைய வகுப்பாசிரியர். ஓரளவு நல்ல புள்ளிகளைப் பெற்று ஒவ்வொருவகுப்பாக ஏறிவந்தான். ஆண்டு 9 இல் அவனுடைய புள்ளிகள் விழத்தொடங்கின. அப்பொழுதுதான் அவன் மீது என்கவனம் சென்றது. வகுப்பறையில் எனது பார்வையை அவன் தவிர்க்க முயல்வதை அவதானித்தேன். அத்துடன் அவன் குழுக்களில் சேராது தனித்திருக்கவிரும்புவதையும் பாடங்களில் அவதானக்குறைவு இருப்பதையும் காணக்கூடியதாயிருந்தது. அவனுடைய சிந்தனைகள் வகுப்பறையினை விட்டு எங்கோ சென்றுவிடும். ஒரு நாள் அவனுடைய கொப்பிகளை எடுத்துப் பார்த்தேன். பாடக்குறிப்புகள் இருக்கவேண்டிய இடத்தில் நல்ல கற்பனைச் சித்திரங்கள் காட்சி தந்தன.

மக்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மை வாய்த்தவரென்பதனை நாம் அறிவோம். இருவர் ஒருபொழுதும் உருவத்திலும் நடத்தையிலும் ஒரேமாதிரி அமைவதில்லை. இருந்தபோதிலும் சாதாரண நடத்தைகளிலிருந்து சந்திரன் நடத்தை வேறுபட்டது. சந்திரனைப் போன்ற சிலரை ஒவ்வொரு பாடசாலையிலும் காணமுடிகின்றது. அவர்கள் பிறருக்குப் பிரச்சினை இல்லாவிட்டாலும் தாங்கள் துன்பத்தில் ஆழ்ந்திருப்பர். அவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் சமூகச்செயற்பாடற்ற, சோகம் நிறைந்த வாழ்க்கையே பெரும்பாலும் நடத்துவார்கள்.

சந்திரனின் ஆசிரியர் அவனுடைய தாயாரை அழைத்து, சந்திரனின் நடத்தை பற்றி வினவினார். தாயார் அவனுடைய ''நல்ல'' பழக்கங்கள் பற்றியும் அவனுக்குச் சித்திரம் வரைதலிலுள்ள ஈடுபாடு பற்றியும் கூறினார்.

இரக்கசித்தமுள்ள பரிவான, புரிந்துணர்வுள்ள ஆசிரியர்களால் இத்தகைய நடத்தையுள்ள பிள்ளைகளைப் பாடசாலை, சமூகச் செயற்பாடுகளிற் படிப்படியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கமுடியும். குழுச்செயற்பாடொன்றில் இப்படியான பிள்ளையொன்று சிறிதளவிலான வெற்றி அனுபவத்தினைத்தானும் பெறமுடியுமானால், அதுவே நல்ல ஆரம்பமாக அமையும். பிள்ளையின் தன்னம்பிக்கை வளர உதவும். குழுவின் முயற்சிகளுக்கு இப்பிள்ளையினது பங்களிப்பும் வேண்டப்படுகிறதென்பதனைப் பிள்ளைகளுக்கு உணரவைத்தல் அவசியமாகின்றது. உண்மையான வாழ்க்கைச் செயற்பாடுகளில் இப்பிள்ளைக்கு மனநிறைவு ஏற்படுமாயின் பகற்கனவுகளில் ஈடுபட வேண்டியதேவை இராது. புத்திசாதுர்யமான ஓர் ஆசிரியர் அப்பிள்ளையில் விசேட ஆற்றல் ஏதாவது இருப்பின் அதனை இனங்கண்டு அதனையே குழுச்செயற்பாட்டிற்குப் பயன்படுத்தி அப்பிள்ளைக்கு வெற்றி அனுபவத்தினை வழங்குவார்.

ஆசிரியர், சந்திரனுக்குச் சித்திரத்தில் உள்ள ஆற்றலை அவதானித்திருந்தார். எனவே வகுப்பு மாணவர்களைக் கொண்டு சித்திரம் வரைதலைவைத்து ஒரு கண்காட்சியினையும் ஒழுங்கு செய்தார். சந்திரனும் பங்குபற்றினானென்பதனையும் அதில் அவன் பலரது பாராட்டுக்களையும் பெற்றானென்பதைதனையும் கூறத்தான் வேண்டும். இதன் மூலம் சந்திரனின் தன்னம்பிக்கையை வளர்த்து அவனது மனப்பாங்கினையும் மாற்றமடையச் செய்வதற்கு முதல் முயற்சியினை ஆசிரியர் மேற்கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கல்வி முறைமை - ஒரு விமர்சனம்

இலங்கையில் ஏறத்தாழ 10,000 அரசாங்கப் பாடசாலைகள் உண்டு. அவை ஒவ்வொன்றும் மாணவர் தொகையிலும் வசதிகளைப் பொறுத்தவரையிலும் மிகவும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அரசாங்கப்பாடசாலைகளாக இருந்த பொழுதிலும் அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைப் பெறுவதில் ஒன்றுடனொன்று போட்டி இடுகின்றன; சமூகத்தில் செல்வாக்குள்ளோரைப் பாடசாலையின் ''பெற்றோர்'' ஆக்குவதிலும் முனைப்பாயிருக்கின்றன. இந்நிலையில் பாடசாலை அனுமதியில், விசேடமாக ஆரம்ப பாடசாலை அனுமதியில், சுற்றறிக்கைகள் மூலம் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பொழுதிலும், அவை பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. இதன் விளைவாகப் பெரிய, வசதிவாய்ந்த பாடசாலைகள் வசதி உள்ள, செல்வாக்கான ''பெற்றோர்'' களைப் பெற்று மேலும் பெரியனவாகவும் வசதி கூடியனவாகவும் திகழ்வது கண்கூடு, இதேவேளை வசதிகுறைந்த பாடசாலைகள் மேலும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இந்த நிலை முழுமையாகப் பாடசாலை முறைமைக்குத் தீங்கு விளைவிக்கின்றது.

வளங்கள், அரச ஆதரவு, பெற்றோர் ஈடுபாடு, அனுமதிக்கப்படும் மாணவர்களின் தரம், கிடைக்கின்ற ஆசிரியர்களின் திறமை என்பவற்றை நோக்கும் பொழுது வசதிகுறைந்த பாடசாலைகள் (பின்தங்கிய பாடசாலைகள்) அலட்சியப்படுத்தப்படுகின்றன என்பதை உணரலாம். இப்பாடசாலைகளின் நிலையை உயர்த்துவதற்கு இதய பூர்வமான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

தீவின் பல பகுதிகளிலும் இடிபாடுகளையுடைய நூற்றுக்கணக்கான பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றுட்பல ஓலையால் வேயப்பட்ட தற்காலிக அமைப்புகளாகும். அனேகமானவை போதிய தளபாடங்கள் அற்ற நிலையிலும் காணப்படுகின்றன. வசதிகளும், கல்வியில் அதிக சந்தர்ப்பங்களும் வழங்கக்கூடிய பாடசாலைகளுக்குச் செல்வதற்கு ஆற்றலோ, செல்வாக்கோ, பண வசதியோ அற்றநிலையிலுள்ள மாணவர்களே இந்த வசதி குன்றிய பாடசாலைகளை நாடுகின்றனர்.

தேசிய மட்டப் பரீட்சைகளிற் பாடசாலைகள் பெறும் அடைவைக் கொண்டே அவை கணிக்கப்படுகின்றன. எனவே அவை பரீட்சைகளைக் குறிக்கோளாகக் கொண்டே செயற்படுகின்றன. பிஞ்சுப்பருவமான 10 வயதிலேயே, பிள்ளைகள் ஆண்டு 5 தேசிய மட்டப்புலமைப்பரிசிற் பரீட்சைக்கு ஆயத்த மாவதிலிருந்து, பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கிய அவர்களின் ஓட்டப்பந்தயம் ஆரம்பமாகின்றது. பிறபாடங்கள் கைவிடப்பட்டுக் கணிதமும் முதல் மொழியுமே மீள மீள அவர்களுக்கு ஊட்டப்படுகின்றன. நல்ல பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்று பாடசாலை புகழைத் தட்டிக்கொள்ளவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். ஆண்டு 5 புலமைப்பரிசிற் பரீட்சையுடன் ஆரம்பிக்கும் அர்த்தமற்ற இந்த ஓட்டப்பந்தயம், ஆண்டு 13 வரையும் தொடர்கின்றது. பெரியபாடசாலைகள் 2-3% மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியினை மையமாகவைத்தே செயற்படுகின்றன.

பரீட்சையில் பெறும் சித்திகளும் சான்றிதழ்களுமே உயர்கல்விக் கூடங்களுக்கும் தொழில் உலகிற்கும் நுழைவுச் சீட்டுக்களாக அமைகின்றன. பரீட்சைச் சான்றிதழ் ஒருவரின் வருங்காலத்தினைத் தீர்மானிக்கின்றது எனலாம், சரியோ தவறோ எமது சமுதாயம் ஒருவரின் சான்றிதழுக்கு முக்கியத்துவமும் பெறுமதியும் அளிக்கின்றது என்பதை மறுக்கமுடியாது. எனவே பரீட்சை முறையிற்பல குறைபாடுகள் இருக்கின்ற போதிலும், நம்பிக்கையான, ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மாற்று வழி ஏற்படும் வரை அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடன் இருக்கத்தான் செய்யும்.

பரீட்சைகளின் முதல் நிலைக்குப் போட்டிகள் அதிகரிக்கும் அதேவேளையில், பரீட்சையை நோக்காகக் கொண்டு கற்பித்தலும் நடைபெறுகையில் தனியார் கல்வி நிலையங்கள் காளான்கள்போல் எங்கும் முளைத்திருப்பதில் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இத்தனியார் கல்வி நிலையங்கள், கல்வியின் கர்த்தாக்களன்று; பாடசாலைக்குப் பதிலான நிறுவனங்களாக அவற்றை ஏற்றுக் கொள்வும் முடியாது. பாடசாலைவேலையின் குறைநிரப்பிகளாக ஒரு காலத்தில் அவை கருதப்பட்டன என்பது உண்மைதான். வகுப்புகளிற் பின் தங்கிய மாணவர் பலர் அவற்றாற் பயனடைந்ததும் உண்மைதான். ஆனால் இன்று முறைசார் கல்வி நிறுவனங்களுக்குச் சவாலாகவும், அவற்றின் அடித்தளத்தையே ஆட்டங்காணச் செய்யுமளவிற்குப் பெரிய பயமுறுத்தலாகவும் அவை காணப்படுகின்றன. முறைசார் கல்வி நிறுவனங்களிலுள்ள குறைகளை இனங் கண்டு, அவற்றை நீக்குவதன் மூலம் தனியார் கல்வி நிலையங்களை வலுவிழக்கச் செய்யலாம்.

பாடசாலைச் செயற்றிட்டத்தில் இணைப்பாடவிதான நிகழ்வுகள் முக்கியமானவை யாகக் கருதப்பட்டு, பெருந்தொகையான பணமும் செலவிடப்படுகின்றது. ஆனால், கணிசமான மாணவர்கள் இவற்றிற் கலந்து கொள்வதில்லை. இவற்றின் பெறுமதியை அவர்கள் உணராதிருப்பதும், பரீட்சையே முக்கியமானது என அவர்கள் கருதுவதும், அவர்களின் திறமைகளை மதிப்பிடும் பொழுது இணைப்பாடச் செயற்பாடுகளில் உள்ள திறமைகள் கவனிக்கப்படாததும் இதற்கான காரணங்களாகும். இச்செயற்பாடுகள் மூலம், மாணவர்கள் தம் அனுபவங்களை மேலும் வளப்படுத்தலாம். தமது மன ஈடுபாடு, திறமை முதலியவற்றை இனங்காண்பதற்கும் விருத்தி செய்வதற்கும் அவை சந்தர்ப்பமளிக்கின்றன; குழுவாகச்சிந்திக்கவும் செயற்படவும் வாய்ப்பளிக்கின்றன. மாணவர்களின் பூரண வளர்ச்சிக்கு இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் இன்றியமையாதவை என்பதை ஆசிரியர்களும் மாணவர்களும் அறிந்து கொள்வதவசியம்.

பரீட்சைக்குத் தேவையற்ற எதுவும் இப்போது கவனிக்கப்படுவதில்லை. விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்குத் தேவையான செய்முறை வேலைகள் நடைமுறைப்படுத்தப்படு வதில்லை; அவற்றைச் செய்வதில் மாணவர்களுக்கும் உற்சாகம் இருப்பதில்லை. செய்முறைவேலைகளில் அவர்கள் ஈடுபடும் பொழுது அவர்களின் அறிவு, உறுதியாவ துடன் வேறும் பல திறன்கள் அவர்களுக்கு ஏற்படுகின்றன.

பாடசாலைகளிலே, விசேடமாக விஞ்ஞான பாடங்களிலே போதிய நவீன நூல்கள் தமிழ் மொழியிற் கிடையாமை, மாணவரின் கல்வியின் தரத்தினைப் பெரிதும் பாதிக்கின்றது. அவர்கள் வகுப்பில் எடுக்கும் குறிப்புக்களில் மட்டும் தங்க வேண்டிய கதிக்குள்ளாகின்றனர். போதிய நூல்கள் ஆங்கிலமொழியில் காணப்படுகின்றன. ஆனால் அவர்களின் ஆங்கில அறிவு போதுமானதாக இல்லாமையால் ஆங்கில நூல்களை அவர்கள் உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்களுக்குக் கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்கக்கூடிய வசதி இருத்தல் அவசியம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதிகாரத்தி லுள்ளவரின் அக்கறையின்மையாலும் தகுதிவாய்ந்த ஆளணியினர் இல்லாமையினாலும் இச்சேவை மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை.

மாணவர்களுக்குப் பூரணத்துவமான கல்வி வழங்கப்பட வேண்டுமானால் பரீட்சை யின் முக்கியத்துவம், அதில் நிலவும் போட்டி ஆகியன குறைவதற்கு வழிகள் காணப் பட்டு, சமூக நோக்கிலும் மாற்றமேற்பட வழிசெய்தல் அவசியம். இப்பொழுது மாணவரின் திறமையின் அளவுகோலாக இருப்பது பரீட்சைப் பெறுபேறுகள் தாம் என்ற நிலைமையும் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்டனையும் பரிகாரமும்

''இதுகள் பிள்ளையளா? பெரிய பள்ளியென்ற பெயர் தான். ஒழுக்கம் கிடையாது ஆசிரியர் பழக்கியுள்ள பழக்க வழக்கம் இது தானா?''

மேல் மாடியில் இளநிலைப் பொதுத்தேர்வை மேற்பார்வை செய்த வெளிப்பாடசாலை ஒன்றைச் சேர்ந்த ஆசிரியை பதற்றத்துடன் இவ்வாறு இரைந்தபடி மாடிப்படி வழியே கீழ் நோக்கி ஓட்டமும் நடையுமாக வருகின்றார். அதேவேளை மேல்மாடியில் ஏதோ கூச்சலிடும் சத்தம் கேட்டு ஆசிரியர்கள் ரமணியும், பாலாவும் படி வழியே மேலே சென்று கொண்டிருந்தனர்.

இளநிலைத் தேர்வின் இறுதிப்பாடம் நடைபெற்று முடிவுற்ற வேளை கூச்சல் வந்த அறையில் 8ஈ மாணவர்கள் இருந்தனர். ஆசிரியர்கள் மேலே வருவதைக் கண்டதும் அவர்கள் சிதறி ஓட முயன்றனர். ஓரிருவர் சுவரேறித் தப்பிவிட்டனர் முப்பது மாணவர்கள் வரையில் ஆசிரியரிடம் சிக்கினர் அவர்களை இவ்விரு ஆசிரியர்களும் விசாரித்த பொழுது கூச்சல் சம்பந்தமாக எதுவும் தெரியாதென்று கூறிவிட்டனர். ஒரு சில மாணவர்களுக்குத் தண்டனை கொடுத்த பொழுதுதான் அவர்கள் நடந்தவற்றைக் கூறி அதில் ஈடுபட்டவர்களையும் அடையாளம் காட்டினர்.

மறுநாள் காலையில் ஆசிரியர் பாலா முதல் நாள் நடந்தவற்றை அதிபரிடம் எடுத்துக்கூறிச் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியலையும் கொடுத்தார். பரீட்சை மேற்பார்வையாளராக வந்த ஆசிரியையின் காதில் விழக்கூடியதாக இவர்கள் தரக்குறைவான வார்த்தைகளைப் பிரயோகித்துள்ளனர். மேலும் விடைத்தாள்கள் முற்றாகச் சேகரிக்கப்பட முன் மேசை மேல் ஏறிப்பாய்ந்து வெளியே ஓடியுள்ளனர். அத்துடன் நிற்காது மேற்பார்வை ஆசிரியை ஏதோ சொல்ல முற்பட்ட பொழுது அனைவரும் கூச்சலிட்டுள்ளனர்.

இந்நடத்தை மிகவும் தரக்குறைவானது; இழிவானது; கண்டிக்கப்பட வேண்டியது. பாடசாலையின் மதிப்பையும் பாதிக்கக்கூடியது, எனவே இதனைப் பாரதூரமான ஒரு செயலாகக் கருதித் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆசிரியர் பாலாவும் அதிபரும் தீர்மானித்தனர். அன்று பாடசாலைக்கு 8ஈ வகுப்பு ஆசிரியர் வராமையால் அவர் வந்ததும் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அதிபர் பாலாவிடம் கூறினார்.

வகுப்பாசிரியர் சிவா மறுநாள் பாடசாலைக்கு வந்ததும் அதிபர் அவரை அழைத்து நடந்தவற்றைக் கூறி விசாரிக்கும் படி வேண்டினார். அப்போது வகுப்பு ஆசிரியர் ஒரு சில வாரங்களுக்கு முன் அவ்வகுப்பில் நடந்த ஒரு சம்பவத்தையும் அதிபருக்கு கூறிவைத்தார். மாணவனொருவன் வீட்டிலிருந்து பாடசாலைக்குக் கொண்டு வந்த ரூபா 500 களவாடப்பட்டதென்றும், களவாடியவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. என்றும் பொதுவாக இவ்வகுப்பு பிரச்சினைக்குரியதென்றும் கூறினார். அதேவேளை இம்மாணவர்களிற் பெரும்பாலானோர் ஆண்டு 5 புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடைந்தவர்கள் எனவும் திரு.சிவா அதிபரிருக்குக்கூறினார்.

இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுடனும் மற்றும் மாணவர்களுடனும் உரையாடிய வகுப்பு ஆசிரியர் பிரச்சினைக்குரிய பத்து மாணவர்களை இனங்கண்டு மேலும் அவர்களுள் மிகத்தீவிரமாகப் பங்கெடுத்த ஐந்து மாணவர்களையும் குறிப்பிட்டு ஒரு பட்டியலைத் தயாரித்து அதனை அதிபரிடம் எடுத்துச்சென்றார். அதிபரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பாசிரியருமாகச் சிந்தித்து இம்மாணவர்களின் பெற்றோரை அழைத்து உரையாடுவதாக முடிவெடுக்கப்பட்டது.

இப்பிரச்சினையில் மேற்கொண்டு நடந்தவற்றை வகுப்பாசிரியரே கூறுவதனைப் பார்ப்போம்.

''அதிபரின் ஆலோசனையுடன் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கு நாள் குறிப்பிட்டு அதிபரைச் சந்திக்குமாறு கடிதங்களை அனுப்பினேன். பத்துப் பெற்றோரில் ஒருவர் தவிர மீதி ஒன்பது பேரும் வந்து சந்தித்தனர். வராத பெற்றோருக்கு இரண்டாவது தடவை பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பினேன். அதன் பின் சந்தித்தார். பெற்றோரைத் தனித்தனியாக அழைத்து அதிபர் முன்னிலையில் பிள்ளைகள் விட்ட தவறுகளை எடுத்த விளக்கமாகக் கூறினேன். அவர்கள் தமது பிள்ளைகள் செய்தது தவறு தான் என்பதனை ஒப்புக் கொண்டார்கள். அதேவேளை சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியைப் பாதிக்காத வகையில் விரும்பிய தண்டனையை வழங்கும் படியும் கேட்டிருந்தனர். அதிபரும் நானுமாக ஆலோசித்து அவர்களை இரு வாரங்கள் பாடசாலையில் இருந்து இடைநிறுத்தி வைப்பதாகத் தீர்மானித்தோம்.

இச்சந்தர்ப்பத்திலே இப்பிரச்சினை சம்பந்தமாக அதிபரின் சிந்தனைகளையும் அவர் எடுத்த நடவடிக்கைகளையும் அவர் மூலம் கேட்பது பயனுள்ளதாக அமையுமாகையால் அதனையும் கேட்போம்.

''ஒரு பிரச்சினை எப்படியோ தோன்றி விட்டது. அநுபவமுள்ள ஆசிரியரினால் அதனைத் தவிர்த்திருக்க முடியும். மாணவர்களுக்கு சிறப்பாக ஊக்கம் கூடியவர்களுக்கும் போட்டிக்குப் பெரிதும் முகங்கொடுக்க வேண்டியவர்களுக்கும், பரீட்சைகள் பெரிய மன அழுத்தத்தினைக் கொடுக்கின்றன. இறுதிநாள் அவர்கள் அடக்கிவைத்த அத்தனை சக்திகளையும் வெளிக்கொணர்வதற்குச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இறுதி நாளன்று விடையெழுதி முடித்த பின்பும், தேர்வு முடியும் நேரம் ஆகவில்லை. மேலும் முக்கால் மணித்தியாலம் விடைத்தாள்களைக் கொடுப்பதற்குக் காத்திருக்க வேண்டுமானால் என்ன விதமான நடத்தையினை மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கலா மென்பது அநுபவப்பட்ட ஆசிரியர்களுக்குத்தான் தெரியும். (''நான் ஆசிரியன் நீ மாணவன்; நான் சொல்வதனை நீ கேட்டே தான் ஆகவேண்டும்'' என்ற கோட்பாட்டினை எல்லா ஆசிரியர்களினாலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சாதித்து விட முடியாது. அதற்கும் சில கெட்டித்தனங்கள் தேவை)

இப்போது மீளவும் இப் பிரச்சினையைப் பார்ப்போம். அதனை அசட்டையாக விட முடியாது. அதன் விளைவான இருவார இடைநிறுத்தம், அம்மாணவர்களின் மனநிலையில் மாற்றமொன்றினை ஏற்படுத்துமா எனச் சிந்தித்தேன். 8ஈ மாணவர்கள் மூன்றாந்தவணை விடுமுறையின் பின் பாடசாலை ஆரம்பமாகியதும் 9ஈ வகுப்பிற்குப் பிரவேசித்தனர். பாடசாலை ஆரம்பமாகிச் சிலதினங்களின் பின் 9ஈ வகுப்பிற்குச் சென்ற நான் பல விடயங்களைப்பற்றி அவர்களுடன் உரையாடி எனக்கும் அவர்களுக்குமிடையில் ஒரு கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்திச் சரியான சந்தர்ப்பதில் மாணவர்கள் தங்களைத் தாங்களே நிர்வகிக்கும் முறை பற்றி அவர்களைக் கேட்டேன். அப்படியானால் பல பிரச்சினைகளை தீர்ப்பதும் சுலபமெனக் கூறினேன். இப்படியான ஒரு செயல்முறை ஏற்படின் அவ்வகுப்பு மாணவர்கள் அனைவரும் கூடித்தாங்களாகவே சில சட்டத்திட்டங்களைத் வகுக்க வேண்டுமெனவும் அவற்றை நடைமுறைப்படுத்த ஒரு குழு நியமிக்கப்பட வேண்டுமெனவும் கூறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்களும் இப்படியான ஒரு செயற்பாட்டினை விரும்புகின்றீர்களா?'' என அவர்களைக்கேட்டு சிந்தித்து மறுநாள் பதில் கூறும்படி வேண்டினேன்.

''மறுநாள் இரு மாணவர்கள் 9ஈ வகுப்பில் இருந்து வந்து என்னைச் சந்தித்தனர், அவர்கள் தங்கள் வகுப்பு, நான் கூறிய ஆலோசனைப்படி கண்காணிப்புக்குழு அமைத்து நிர்வகிக்க விரும்புவதாகக்கூறினர். நான் 9ஈ வகுப்பிற்குச் சென்று அவர்களுக்கு ஆலோசனையாகச் சில வழிகாட்டல்களை முன்வைத்தேன். ஐந்துபேர் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழுவினைத் தெரிவு செய்யும் படியும் மாணவர்கள் ஆற்றும் குற்றச் செயல்கள் யாவையென இனங்காணும் படியும் அதற்கு அபராதம் விதிக்கலாமெனவும் கூறிவைத்தேன். மறுநாள் அவர்கள் தயாரித்த அறிக்கையினைப் பார்த்தபின் தான் 9ஈ வகுப்பில் இருந்த பிரச்சினைகளை விளங்கக்கூடியதாக இருந்தது. இத்தனையும் ஆசிரியர் களுக்குத் தெரியாதிருக்கின்றது''.

9ஈ மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை திருத்தங்கள் எவையுமின்றி அப்ப டியே கீழே தரப்படுகின்றது.

''பின்வரும் ஒழுங்கீனங்களும் குற்றப்பணமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. கெட்ட வார்த்தை பேசுவதற்கு - 2 ரூபா

2. கெட்ட செயல்களில் ஈடுபடுதலுக்கு - 5 ரூபா

3. ஆசிரியரை அவமதித்துப் பேசினால் - 3 ரூபா

4. மாணவர் முதல்வர் கட்டளைக்குக் கீழ்படியாவிட்டால் - 2 ரூபா

5. வகுப்பின் அநாவசியக் குழப்பங்களுக்கு - 3 ரூபா

6. வகுப்பில் சண்டை பிடித்தலுக்கு - 5 ரூபா

7. தண்டப்பணம் ஒரு நாளுக்குப் பிந்தினால் - 50 சதம்

''இவற்றைக் கவனிப்பதற்குப் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன.)

இவ்வறிக்கையினை அவதானிக்கும் பொழுது ஆசிரியர்களுக்கோ மாணவர்க ளுக்கோ, தெரியாத பல பிரச்சினைகள் அவ்வகுப்பில் உள்ளன என்பது புலனாகின்றது.

நியமிக்கப்பட்ட குழு மிகச்சிறப்பாகச் செயற்பட்டது. அதிபரின் வழிகாட்டலும் கிடைத்தது. சில சமயங்களில் சகமாணவர்களிடம் இருந்து தண்டப்பணம் விதிக்கும் பொழுது எதிர்ப்புக்கள் எழுந்தன. இருந்த போதிலும் அனைவரும் குழுவின் தீர்மானத்திற்குப் பணிந்தனர். ஆரம்பத்தில் தண்டப்பணம் அதிகம் கிடைத்தது. படிப்படியாக இத்தொகை குறையத் தொடங்கியது. எனவே பிரச்சினை குறையத் தொடங்கி விட்டதென்பதே அர்த்தமாகிறதல்லவா?

காலப்போக்கில் இவ்வகுப்பு மாணவர்களில் நல்ல பல மாற்றங்களை அவதானிக்க கூடியதாக இருந்தது - கற்றலில் நாட்டம், கீழ்ப்படிவு, ஒழுக்கம், பாடசாலைச் செயற்பாடு களில் ஒத்தாசை, போன்றவற்றைக் கூறலாம். சிறப்பாக அவர்கள் ஒரு பூந்தோட்டத்தையே பாதுகாப்பதையும் இங்கு எடுத்துக்கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுங்கற்ற அகச் சூழலிலே...!

ஆசிரியர்களை அரவணைத்து நல்ல ஆலோசனைகளை வழங்கி அவர்களின் பணியைச் சரியான பாதையில் நெறிப்படுத்தும் ஆற்றல் அதிபரிடம் இருக்க வேண்டும். சொந்தக் கோபதாபங்களை பெரிதுபடுத்தாமல், மாணவர்களின் மேம்பாட்டிற்காகத் தம் ஒத்துழைப்பை முழுதாக வழங்கும் மனப்பாங்கு ஆசிரியர்களிடம் இருக்க வேண்டும். 'தை 95 விளக்கு இதழில் ''சம்பவக் கற்கையின்'' உயர் பயன் பற்றிய கட்டுரை பிரசுரமாகியிருந்தது. ஒருவருடைய வாழ்வில் இடம் பெற்ற சிக்கலான நிலைமையிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் அனுபவக்கல்வியே சம்பவக் கற்கை

ஒரு பாடசாலையின் கவி நிலை (Climate) என்பது அப்பாடசாலையின் ஆசிரியர்களுக்கிடையேயும், ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையேயும் நிலவுகின்ற தொடர்பு முறையின் தரத்தையும் நெருக்கத்தையும் சார்ந்ததாகவே பெரும்பாலும் அமையும். பாடசாயையின் கூட்டுமுயற்சியும் ஏனைய ஆக்கச் செயற்பாடுகளும் முன்னெடுத்துச் செல்லப்படுவதோ அல்லது மனக் கசப்பிற்கும் பிரிவினைக்கும் வழிவகுக்கும் நிலைப்பாடு உருவாகுவதோ இத்தொடர்பு நிலையிலேயே தங்கியிருக்கின்றது. பூசல்கள் உருவாகும் போது அவை பெரும்பாலும் மாணவர்களையும் சென்றடைவது விரும்பத்தகாத ஒரு நிலையாகும். ஆசிரியர்களின் மன உளைச்சல்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைப் பாடசாலை ஒன்றில் நடை பெற்ற ஒழுக்காற்றுச் சபைக் கூட்ட நடவடிக்கைகள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

பிரபல கல்லூரி ஒன்றின் உயர்தர மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்ச்சியிலும் இராப்போசன விருந்திலும் கலந்து கொள்வதற்கு அக்கல்லூரியின் கணிதப் பிரிவு மாணவர்கள் இணங்கவில்லை. அதனால் எழுந்த நிலையை ஆராய்வதற்காக, ஒரு நாள் பாடசாலை முடிவடைந்தவுடன் ஒழுக்காற்றுச் சபைக் கூட்டம் நடைபெற்றது. கல்லூரி அதிபர் திரு. கந்தசாமி, பிரதி அதிபர் திரு. மணியம், பகுதித் தலைவரும் கணித ஆசிரியருமான திரு. செல்லத்துரை, இரசாயனவியல் ஆசிரியர் திரு. பரமேஸ்வரன் உடற்பயிற்சி ஆசிரியர் திரு கணேசன், உயர்தர மாணவர் ஒன்றியப் பொறுப்பாளர் திரு. பாலா, உயிரியல் ஆசிரியர் திரு. நித்தியானந்தன் ஆகியோர் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

திரு. கந்தசாமி, (அதிபா) (இன்னொரு கூட்டம் நடைபெறவுள்ளது. சச்சரவின்றிச் சுமுகமாக நிறைவுபெற வேண்டும். எப்பொழுது கூட்டம் முடிவு பெறும் என்று ஏங்கிக் கொண்டே இருக்க வேண்டியுள்ளது. அடுத்தவாரம் நடைபெறவுள்ள உயர்தர மாணவர் ஒன்றியத்தின் இராப் போசன விருந்தினை பகிஷ்கரிக்கப் போவதாகக் கணிதப் பிரிவு மாணவர்கள் கூறியதாகப் பொறுப்பாசிரியர் திரு. பாலா என்னிடம் சொன்னார். அவர் எடுத்த பல முயற்சிகளும் பலனளிக்கவில்லை. மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி நாம் இங்கு ஆராய வேண்டியுள்ளது. திரு பாலா, இந்த விடயம் சம்மந்தமான முழுவிபரத்தையும் கூறுங்கள்.

திரு.பாலா பொறுப்பாசிரியர்: (இந்த வருடம்தான் என்னிடம் இப்பொறுப்புத் தரப்பட்டது. என்னை அவமானப்படுத்துவதற்காகச் செல்லத்துரை சந்தர்ப்பம் பார்த்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்துக்கட்டி விட்டான் போலிருக்கிறது.)

உயர்தர வகுப்பில் நெடுங்காலமாக கணித, உயிரியல் ஆசிரியர்கள், மாணவர்களுக்கிடையே சிற்சில போட்டி மனப்பாங்கும் பூசல்களும் நிலவிவந்துள்ளமையை நாம் அறிவோம். அதற்குச் சிலர் தூபம் போட்டு வந்துள்ளனர். ஒன்றியத் தலைவர் தெரிவில் ஏற்பட்ட சில கசப்புணர்வுகள் தாம் இன்றைய பகிஷ்கரிப்புக்குக் காரணம். இவற்றினைத் தீர்ப்பதற்கு உதவும் வண்ணம் சம்பந்தப்பட்ட வகுப்புக்களின் வகுப்பு ஆசிரியர்களையும் பாட ஆசிரியர்களையும் வேண்டியிருந்தேன். ஆனால் எதுவும சரிவரவில்லை.

திரு.கணேசன் - உடற்கல்வி ஆசிரியர்: (அதிபர் என்னை வைத்துக் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை வேலை வாங்குபவர். நல்லாய்க் கொடுக்க வேண்டும்) நான் இப்பாடசாலையின் பழைய மாணவன். எனது மூதாதையர் இப்பாடசாலைக்குக் காணிவழங்கியுள்ளனர். எந்த மாணவனுக்கும் தன்னிச்சையாகக் கட்டுப்பாடின்றி நடப்பதற்கு அனுமதிக்க முடியாது. விருந்தில் பங்குபற்றாத மாணவர்கள் பாடசாலையிலிருந்து நீக்கப்பட வேண்டும் அல்லது மற்ற மாணவர்களும் அவர்களைப் பின்பற்றுவார்கள்.

திரு. கந்தசாமி அதிபர்; (இது என்ன தலையிடி) நாம் மற்றவர்களினுடைய கருத்துக்களையும் கேட்போம். திரு.செல்லத்துரை உங்களுடைய கருத்தைக் கூறுங்கள்.

திரு.செல்லத்துரை (கணித ஆசிரியா) (பாடசாலை விட்டால் வீடு செல்வதில்லை - தங்களுடைய தலையிற்தான் பள்ளிக் கூடம் உண்டு என்ற நினைவு பாலாவுக்கும். பரமேஸ்வரனுக்கும் பின்னேரங்களில் அதிபருடன் நின்று எங்களுக்கெல்லாம் அள்ளிவைப்பவர்கள். இருந்தாலும் பாலா என்னைச் சமாதானம் செய்து தரும்படி கேட்டு விட்டார். சரிவந்தால் எனக்குப் பெருமைதான்; சரிவராவிட்டாலும் எனக்கு மகிழ்ச்சி தானே) திரு பாலா என்னை வேண்டிக் கொண்டதற்கு இணங்க நான் கணிதவகுப்பு மாண்வர்களுடன் வற்புறுத்திக்கதைத்தேன். அவர்கள் இணங்கவில்லை. நாம் அவர்களை அவர்கள் பாட்டிற்கு விடுவதுதான் நல்லதென நினைக்கின்றேன். பரமேஸ்வரன் காட்டிய கெட்டித்தனத்தை நான் முறியடித்தது ஒருவருக்கும் தெரியக்கூடாது.

திரு. பரமேஸ்வரன் இரசாயனவியல் ஆசிரியர்: இரு நாட்களுக்கு முன் நான் கணித மாணவர்களுடன் கதைத்தேன். அவர்கள் எனது வாதத்தை ஏற்றுக் கொண்டதாகத் தெரிந்தது. சாதகமான பதிலை எதிர்பார்த்திருந்தேன். ஆனால் கைகூடவில்லை. (செல்லத்துரை தன்னுடைய விளையாட்டு எனக்குத் தெரியாதென்று நினைக்கின்றார். அவர் வேண்டிச் சம்மதிக்காத மாணவர்கள் நான் கேட்டுச் சம்மதிப்பதை அவர் விரும்ப வில்லையாம்) இருந்தாலும் அவர்கள் மனதில் ஒரு மாற்றம் தெரிகின்றது. முதலில் விருந்தினை நடத்துபவர்கள் மீது கோபம் காட்டிக் குறையும் கூறியவர்கள் இப்பொழுது பங்குபற்றாமைக்கு வெவ்வேறு காரணங்கள் கூற முற்படுகின்றனர்.

திரு. கந்தசாமி அதிபர்; இங்கு சமுகமளித்த எல்லோரது அபிப்பிராயங்களையும் அறிய விரும்புகின்றேன். சேவை மூப்பும் அனுபவமுள்ள திரு. நித்தியானந்தனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
யாழ்ப்பாணம்
தகவல் சேகரணம்

கருத்தையும் கேட்போம்.

திரு.நித்தியானந்தன் - உயிரியல் ஆசிரியர்: அனுபவத்துக்கு மரியாதை கொடுக்கும் காலமல்ல இது. இளஞ்சந்ததியினர் தங்களுக்கு எல்லாமே தெரியுமென்று நினைக்கின்றனர். இது ஆரம்பத்திலேயே தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய பிரச்சனை. உயிரியல் மாணவர்கள் சரியாகத்தான் நடந்துள்ளனர். பொறுப்பாசிரியர் எம்முடன் ஆலோசித்திருந்தால் எல்லாம் நல்லபடி நடந்திருக்கும். (பாலாவுக்கு எல்லாம் தெரியுமென்ற கர்வம். இது நல்ல பாடம்) இப்பொழுது காலம் கடந்து விட்டது போல் தெரிகின்றது. கடுமையான நடவடிக்கை எடுத்தாற்றான் பின்னால் வருபவர்களும் இவ்வாறு இருக்க மாட்டார்கள். (இது பாலாவை மேலும் பிரச்சனைக்குள்ளே காலைவைக்கச் செய்யும்)

திரு.கந்தசாமி அதிபர்: பிரதி அதிபரின் கருத்துக்களையும் நாம் கேட்போம்.

திரு: மணியம் பிரதி அதிபர்; (இந்த மனுஷன் என்னையும் பிரச்சினைக்குள் மாட்டினால், இவர்களைக் கொண்டு பின்பு ஒரு வேலையும் செய்விக்க முடியாது. தனிய முறிய வேண்டி வரும்) இது ஒரு சிக்கலான பிரச்சனையாக உள்ளது. நன்றாக யோசித்துத்தான் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நாம் மீண்டும். ஒரு முறை கூடித் தீர்மானம் எடுப்பது நல்லது போல் தெரிகின்றது.

திரு.கந்தசாமி அதிபர்: இப்பொழுது நாம் எல்லோருடைய அபிப்பிராயங்களையும் கேட்டாகி விட்டது. இக்கலந்துரையாடலிலிருந்து நாம் அறியக்கூடியது, கணித வகுப்பு மாணவர்கள் விருந்தில் பங்குபற்றும் சாத்தியமில்லை என்பது, அடுத்து இம்மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் படி சிலர் அபிப்பிராயம் கூறியுள்ளீர்கள். அதனைப் பற்றி, பிரதி அதிபரின் ஆலோசனைப்படி பிறிதொருமுறை கூடி தீர்மானிப்போம். (பெரிய சுமை இறங்கியது போல இருக்கின்றது)

இக்குழுக்கூட்டத்திலே ஆரோக்கியமான தொடர்பு முறைகளைக் காணமுடியவில்லை; கலந்துரையாடல் பயனுள்ளதாக அமையவில்லை. பிரச்சனையைச் சரியாகவும் திருப்தியாகவும் விளங்கவும் விளக்கவும் சரியான நெறிப்படுத்தலின் அடிப்படையில் உறுதியான ஒரு தீர்மானத்தை எடுக்கவும் இக்குழுவால் முடியவில்லை. காரணம் என்ன? பயன்தரு தலைமைத்தவத்தை வழங்கக்கூடிய ஆற்றலை அதிபர் வளர்த்துக் கொள்வில்லை; நன்மை தருகின்ற ஒரு பொது இலக்கை எட்டுவதற்கு அந்தரங்க சுத்தியுடனும் விட்டுக் கொடுப்புடனும் ஒத்துழைக்கும் குழுவாக இயங்குவதற்கு வேண்டிய பயிற்சியினை இவ்வாசிரியர்கள் பெற்றுக் கொள்ளவில்லை; தமக்கிடையேயிருந்த பகைமை பூசல்களின் அடிப்படையிலேயே ஒவ்வொருவரும் தத்தம் கருத்துக்களை வெளியிட்டனர். விளைவு....? குழு தன் குறிக்கோளிலிருந்து தவறிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வீட்டுமங்கள நிகழ்வுகளை

மங்களத் திரைப்படமாய்

பார்க்கவேண்டுமா!

நாடுங்கள்.

★

# EXPO

# Video Complex

KONDAVIL WEST, KONDAVIL.

கோண்டாவில் மண்ணில் நம்பகரமான ஒரேயொரு
வீடியோ ஸ்தாபனம்.

(தரம்செறிந்த படக்கலைஞர்களின் உன்னத படைப்புக்கள்
கிடைக்குமிடம்)

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜலட்சுமி ஜுவல்லறி

அழகிய கலைநயம்
எழிலுறு தொழில் வளம்
தரம்மிகு தங்க,
வைர நகைகளுக்கொரு இடம்
**சஜலட்சுமி ஜீவல்லறி**



நவநாகரிக நளின டிசைன்கள்
புவியோர் புகழும்
புதுமைப் பொலிவும்
தமிழர் பண்பும்
தமிழ் பண்பாடும் எழிலின் சிகரம்
எனும் நகைக்கொரு இடம்
**கஜலட்சுமி ஜீவல்லறி**



சொல்லிய ஓடரில் செய்தே
நகைகளைத் துல்லியமாகவே
தொழில்வளம் பெருக
நல்விதமாக அந்நாளிலே
தருமிடம்
**செல்வி கஜலட்சுமி ஜீவல்லறி யாமே.**

**470, கே. கே. எஸ் வீதி,**
**கோண்டாவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org